

# பாவம் எந்த ஒரு தேசத்திற்கும் ஒரு நிந்தையாய் இருக்கிறது

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# டைட்டானிக்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-27 M மேம்பட்ட அடையாளம்

38. ஜனங்களுக்கு அடையாளங்கள் உள்ளன. நாம் அடையாளங்கள் நிறைந்த உலகத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். மனிதன் சில குறிப்பிட்ட அடையாளங்களை அடையும்படி அவன் முயற்சித்துக் கொண்டிருக்கிறான். மனிதன் தன்னுடைய விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலமாகவும், அவனுடைய சொந்த சாதனைகள் எவ்வளவு தனிச் சிறப்பு மிக்கது என்பதை உணர்த்தும் வகையில் ஒரு அடையாளத்தை, அவன் பெற முயற்சித்துக் கொண்டிருக்கிறான். அல்லது தான் எவ்வளவு பெரியவன் என்பதைக் காண்பிக்கும், ஒரு அவனுடைய அறிவாற்றலின் நினைவுச் சின்னத்தை அல்லது அவன் எவ்வளவு ஒரு சூத்திரதாரி என்பதைக் காண்பிக்கக்

கூடிய, ஒரு அடையாளத்தைப் பெறும்படி முயற்சித்துக்கொண்டிருக்கிறான். அவன் காலங்கள் தோறும் அதைச் செய்து கொண் டிருக்கிறான்.

39. உதாரணத்திற்கு, ஒரு நூற்றாண்டுக் கும் குறைவாக உள்ள ஒரு காலத்தில், உலக கப்பல் துறை வல்லுநர்கள், தாங்கள் கட்டும் கப்பலை, மூழ்கடிக்கத்தக்க, போது மான அளவிற்கு, பெரிய அலை என்பதே இல்லை என்று தங்கள் தொழில் நுட்பத்தின் திறமையைக் காட்டக்கூடிய ஒரு அடை யாளத்தை இந்த உலகத்திற்குக் கொடுக்க, அவர்கள் நினைத்தனர். அந்த குறிப்பிட்ட கப்பலுக்கு, அவர்கள் “டைட்டானிக்” என்று பெயர் சூட்டினர். மூழ்கடிக்கப்பட முடியாத அந்தக் கப்பலை உலகத்திற்குக் காண்பிக்க முடியும் என்று அவர்கள் சொல்லத்தக்க, அந்த சிறந்த கப்பல் கட்டும் கலையானது, ஒரு நிறைவுக்கு வந்தது. அது உலகத்திற்கு நீடித்திருந்த நினைவுச் சின்னமாகவும் இருந்தது.

40. எனவே அதைக் கட்டினவர்களின் அறிவாற்றல், அவர்களின் சொற்பொழிவு, மற்றும் உரையாடல்கள், மற்றும் இந்தக் கப்பலை மூழ்கடிக்கவே முடியாது என்ற விஞ்ஞானத்தின் நிரூபணம் ஆகியவைகள், அதன் பாதுகாப்பை மேலும் சுட்டிக் காட்டின. இந்தக் காரியங்களெல்லாம் அந்தவிதமாக ஜனங்களிடத்தில் சொல்லப் பட்ட போது விஞ்ஞான ஆராய்ச்சி சரி என்று சொல்லுகிற வரைக்கும், அது எல்லாம் சரியாகத்தான் உள்ளது என்ற நிச்சயத்தைக் கொண்டவர்களாக, ஜனங்கள் காணப்பட்டார்கள்.

41. ஆக, அவர்கள் அந்த கப்பல் பிரயாணத்தைத் துவக்கி சமுத்திரத்தைக் கடந்து கொண்டிருந்தார்கள். எந்தக் காரிய மும் தங்களுக்குப் பாதிப்பை உண்டாக் காது என்ற அவ்வளவு பாதுகாப்பான உணர்வோடு, அவர்கள் பிரயாணிக்கை யில், ஒரு பெரிய மதுபான விருந்தை அவர்கள் ஆயத்தம் செய்து கொண்டிருந்

தனர். அதிலிருந்த எல்லா ஆண்களும், பெண்களும், கிட்டத் தட்ட அனைவரும் என்று நான் சொல்லுவேன். அவர்கள் குடித்து வெறித்திருந்தார்கள். கப்பலோட்டி யும், கப்பல் தலைவனும் கூட, மற்ற எல்லோருமே குடித்து வெறித்திருந்தார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். எல்லா வாத்தியங்களும் முழங்க ஆரம்பித்தன. இன்றைக்கு நமக்கு இருக்கின்ற “ராக் அண்ட் ரோல்” போன்று அன்றைக்கு விசேஷமாய் காணப்பட்ட “ஜாஸ் மியூசிக்” இசைத்துக்கொண்டிருந்தது. இந்தக் கப்பல் எப்பேர்ப்பட்ட அலைகளையும், அல்லது எந்தக் கடலையும், தாங்கக் கூடியது என்று உலகத்திற்கு தங்களது அறிவின் திறமை யின் அடையாளமாக கொடுத்த கப்பலில் மிகவும் பாதுகாப்போடு இருக்கிறோம் என்ற காரணத்தினால் அவர்கள் அப்படி இருந்தார்கள்.

42. அவர்கள் அந்த வெறித்த நிலைக் குள்ளாக இருக்கையில், கப்பலானது மூடு

பனிக்கு நேராகச் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது கப்பலின் தலைவர்களில் ஒருவன் “நாம் கப்பலின் இயந்திரங்களைக் கண்டிப்பாக சோதிக்க வேண்டும்”, என்று கூறினான். ஆனால் பிரதான அதிகாரியோ, “கப்பலை நேராக முன்னுக்குச் செலுத்து! நாம் துறைமுகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அழைப்பிற்கு நாம் போக வேண்டும்” என்று கூறினான். கப்பலும், அந்த சூழ்நிலையின் வல்லவன் என்பது போல, மூடுபனிக்குள்ளாக சென்றது. ஆனால், திடீரென்று, ஒரு மிதக்கும் பெரிய பனிக்கட்டியில் கப்பல் மோதி, அப்படியே தண்ணீருக்கடியில் சென்று விட்டது.)

43. ஒரு புலவர் தமது பாடலில், தேவன் அவருடைய வல்லமையுள்ள புயத்தினால், இந்த உலகத்திற்கு அதை நிற்காது என்பதைக் காண்பிக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளதாக நமக்கு சொல்லப்பட்டுள்ளது.

44. அவர்களுடைய மிகச் சிறந்த சாதனையானது, ஆயிரக்கணக்கான மக்களோடு, குடித்து வெறித்த மக்களோடு, கடலுக்கடியில் சென்றுவிட்டது. அது கிரியை செய்யவில்லை.



# இந்த தேசம் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பும்படி தேவன் ஒரு போதும் விடமாட்டார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 58-10-12 திடீரென்று சபையானது இரகசியமாக மறைந்து போகுதல்

23. சில காலத்திற்கு முன்னால் பியர்ல் துறைமுகத்தின் மீது திடீர் தாக்குதல் என்பதை பற்றிய கட்டுரையை நான் வாசித்துக் கொண்டிருந்தேன். அது மிகச் சரியாக அறியப்படாமல் நடத்தப்பட்ட தாக்குதல் இல்லை. ஜப்பானியர்கள் தாங்கள் அதை செய்யப்போகிறார்களென்று ஏற்கனவே அவர்களை எச்சரித்திருந்தனர். ஆனால் மோசமான பாகம் என்னவென்றால், அவர்கள் அந்த எச்சரிக்கையை புறக்கணித்தனர். அவர்கள் எச்சரிக்கையின் அடையாளங்களை கண்டுக்கொண்டிருந்தனர். ஜப்பானிய ராணுவம் ஒன்றாகக் கூடிக்கொண்டிருந்தனர். பெரிய கப்பல்கள் வெடிமருந்து,


குண்டு முதலியவற்றால் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. அச்சுருத்தல் காற்று வெளியில் இருந்தது. மேலும் அவர்கள் தாக்குதலுக்காக சரியாக வரிசையில் இருந்தனர். ஆனால் அவர்களோ அதை புறக்கணித்தனர்.



24. இன்று சபையுடனும் காரியம் அதுவாகத்தான் இருக்கிறது. சபையானது நியாயத்தீர்ப்பின் வரிசையில் உள்ளது. ஆனால் அவர்கள் கர்த்தருடைய வருகையை புறக்கணித்துக் கொண்டிருக் கின்றனர். எனவே... நீங்கள் அவரை குறை கூற முடியாது.

25. ஜப்பானியர்கள் எந்த நேரத்திலும் தாக்கக்கூடும் என்றும் அவர்களுடைய பெரிய கடற்படை கடல் தண்ணீரில் பிரயாணப்பட்டுக் கொண்டிருக்கிறதென் றும், பியர்ஸ் துறைமுகத்தை நோக்கி மெதுவாகவும் ஆனால் படிப்படியாகவும், சீராகவும் இயங்கிக் கொண்டிருந்து, அது பியர்ஸ் துறை முகத்தில் சுற்றிலும் பரவிக் கொண்டு கூச்சலிட்டபோது, அவர்கள் அதைக் குறித்து நகைக்க மாத்திரம் செய் தனர். மேலும், “ஓ, முட்டாள்தனம். நீங்கள் அச்சத்தை உண்டாக்குபவர்கள். நீங்கள் முக்கியத்துவ மில்லாத விஷயங்களுக் கெல்லாம் கவலைப்படுபவர்கள், உங்களு

டைய எண்ணமெல்லாம் ஏதோ பிரச்சனை யைப் பற்றியதாகவே இருக்கிறது” என்று அவர்கள் சொன்னார்கள்.



26. மேலும் அடுத்த நாள் காலையில் மகத்தான தாக்குதலுக்கு சிறிது முன்னால், சிறிது முன் இரவில், அங்கே பியர்ஸ் துறைமுகத்தில் ஒரு மகத்தான நடனம் அல்லது ஒரு பெரிய குடிவிருந்து, ஆடல், பாடல் கொண்ட நிசழ்ச்சி கொடுக்கப்பட் டிருந்தது. ஜப்பானியர்கள் வந்துக் கொண் டிருந்தார்களென்று அவர்கள் கூறுவதற்கு எவ்வளவு முயற்சித்தனர் என்பது காரிய

மில்லை, அவர்கள் இன்னும் எச்சரிப்பை எடுத்துக்கொள்ள மறுத்தனர்.



27. ஒரு சில நிமிடங்களாக அவர்களை நோக்குவோம். அங்கே ஒரு சிறிய வெளியீடு வெளியே செல்லுகிறுது. மேலும் செய்தித்தாளின் மூலையில் ஒரு பகுதி, ஏறக்குறைய ஒரு சுகமளிக்கும் கூட்டமானது விளம்பரப்படுத்துவது போல, ஒரு சிறிய இடம், ஜப்பானியர்கள் கடல் தண்ணீரில் தங்களுடைய பாதையில் இருந்தார்கள் என்றும் ஒரு மகத்தான கடற் படையானது அந்த வழியாக முன்னேறிக்

கொண்டிருந்ததாகவும் விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது. “மற்றவர்களோ” முட்டாள் தனம் என்று கூறுகிறார்கள். நாங்கள் அதைப்போன்ற காரியத்தில் எந்த நம்பிக் கையும் கொள்வதில்லை. எதை குறித்து நீங்கள் எங்களை அச்சமூட்ட முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

28. பிறகு நாம் கண்டுக்கொள்ளு கிறோம், இரவு நெருங்குகையில் வீடுகளை யும், வீதிகளையும் என்னால் காணமுடி கிறது, பட்டணத்தை விட்டு வெளியேற ஆயத்தமாவதற்கு பதிலாக, வாலிப ஸ்திரீகள் அனைவரும், தங்களுடைய புது மேலாடைகளையும், மற்றவைகளையும் அணிந்துக் கொண்டிருந்தனர்: அவர்கள் கலந்துக் கொள்ளப் போவதாயிருந்த அந்த மகத்தான ஜூபிலிக்கு அவர்கள் சென்று கொண்டிருந்தனர். இவை தவிர ராணுவ அதிகாரிகளும், எல்லா படைவீரர்களும், இந்த பெரிய மது அருந்தும் விருந்தில் கலந்துக் கொள்ளக்கூடிய சிறு பரிமாற்

றங்களை எழுதுவதில் அதிக அலுவலா யிருந்தனர், மேலும் பாரம் ஏற்றி செல்லும் லாரிகள் முழக்கமிட்டுக் கொண்டும், சுறுப்சுறுப்பாகவும் பீர், வைன் மற்றும் காரியங்களில் சிறந்ததைக் கொண்டு வந்துக் கொண்டிருந்தன. ஆனால் முழு நேரமும் ஜப்பானிய கடற்படையானது அதனுடைய பாதையில் இருந்தது அவர் கள் எச்சரிப்பைக் கேட்கதவறினர்.



29. சூரியன் மறைய தொடங்கின போது, அவர்களனைவரும் இந்த ஒரு மகத்தான மது அருந்தும் இடத்தில் கூடினர் பக்கத்தில் ஏதோ ஒரு இடத்தில் இருக்க லாம். மது ஊற்றி கொடுப்பவர் மது அருந்தும் இடத்தை தேய்த்து பளபளப் பாக்கிக் கொண்டிருந்தார். யாரோ ஒருவர் ஏதோ ஒன்றை இதைப்போன்று கூறினார். “சொல்லுங்கள் வதந்தியை நீங்கள் கேட்டீர்களா? “இல்லை, நான் கேட்டதாக நான் நம்பவில்லை” என்று பேசின மனிதனிடம் அவன் கூறினான். “ஓ, ஒரு ஜப்பானிய கடற்படை இந்த வழியாக வந்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய ஏதோ ஒன்றை அவர்கள் கூறுகிறார் கள்”.

30. பிறகு வேறொருவர் உரையாடலை நிறுத்தினார். மேலும் ஒரு வாலிப அறி வற்ற ஸ்திரீ அங்கே நுழைந்து, தன்னுடைய பாதத்தை மது அருந்தும் அறையின் மீது நீட்டி, நாம் ஒரு நல்ல நேரத்தை

அனுபவிக்கும்படியாக இங்கே இருக்க, நீங்கள் ஒரு அச்சமூட்டும் ஒரு யுத்தத்தைப் பற்றி பேசாதிருக்கும்படி உங்களுக்கு தெரியாதா? என்றாள்.



31. கர்த்தருடைய வருகையை குறித்த இன்றைய உலகத்தின் போக்கும் ஏறக் குறைய அதே போன்று இருக்கவில் லையா? “நீங்கள் பழைய பாணியிலான நடை, உடைகளை கொண்டிருப்பவர்கள், காலத்துக்கு ஒத்து போகாதவர்கள், உங்க ளுடைய உடையும் செயலும், உங்கள் செய்கைகளும் எதை உண்டாக்குகிறது?

32. ஆனால் நாமோ அந்த கர்த்த ருடைய இரகசியமான திடீரென்ற பிரசன்ன மாகுதலுக்காக எதிர்ப்பார்த்துக் கொண் டிருக்கிறோம். அங்கே காற்று வெளியில் பரிசுத்த ஆவியானவரின் ஒரு செய்தி இருந்து கொண்டு வருகையானது சமீபமா யிருக்கிறதென்று நம்மிடம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

33. பெரிய குழப்பங்களுக்குள்ளாய் சென்றுக் கொண்டிருந்தது, மேலும் அந்த இரவு ஒரு பயங்கரமான காரியமாக இருந்திருக்கத்தான் வேண்டும். இரவின்

போது கொஞ்ச நேரமாக, அவர்கள் ஒரு வாலிப ஸ்திரீயை, ஒரு அழகான கட்டமைப்புள்ள வாலிபப் பெண்ணை எடுத்து, அவளிடமிருந்து அவளுடைய உடைகளை களைந்துப் போட்டு, ஒரு கீழ் பகுதி ஆடையுடன், சிறிய குதிரைகள் இழுத்துச் செல்லும் நான்கு சக்கர வண்டியில் அவளை வைத்து, தெருவிலும் மற்ற இடங்களிலும் அவளை ஓட்டிச் சென்று, ஒரு பெரிய நேரம் அவர்களுக்கு இருந்ததாக அது கூறினது. ஜப்பானியர்கள் முழு நேரமும் நிலங்களை வெற்றியுடன் கைப்பற்றிக் கொண்டே சரியாக வந்துக் கொண்டிருந்தனர்.

34. ஆகாய விமானங்கள் சமிக்கையின் மூலம் கவனித்துக் கொண்டிருந்ததான சூழ் நிலையில், பணியில் இருந்த மனிதர்கள் இரவு முழுவதும் இந்த பெண்களை சுற்றிக் கொண்டிருந்து மயக்கமுற்ற, கலக்கமுற்ற நிலையில், அடுத்த நாள் காலையில் பணியின் மத்தியில் தூங்கிய நிலையில்

பிடிபடுமட்டாக அந்த பெரிய விருந்தில் இருந்தார்கள்.



35. கர்த்தருடைய வருகையிலும் அதைப் போலவே இருக்கப்போகிற தென்று நான் அஞ்சுகிறேன். சபை கர்த்தருடைய வருகையில், அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கும் கடமையில் தூங்கு கிறவர்களாய் இருக்கப்போகிறார்கள். உலகக் காரியங்களில் கவலை நிறைந்தவர்

களாய் மது அருந்திய நிலையில் இருக்கப் போகிறார்கள்.

36. பிறகு பட்டணத்தின் மீதாக விமானங்கள் பறந்து குண்டுகளை வீசிக்கொண்டிருந்தது. அவர்கள் அந்த பட்டணத்தை தரைமட்டமாக உருகுலைய பண்ணினார்கள். ஏன்? ஏனெனில் அவர்கள் எச்சரிப்பை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த இரக்கமற்ற ஜப்பானிய படை வீரர்கள் அங்கே உள்ளே ஓடி வந்து, அந்த வாலிப ஸ்திரீயையும், பட்டணத்து ஜனங்களில் மீதியானவர்களையும் தெருவில் கற்பழித்து பிறகு அவர்களை வாளால் துண்டுகளாக வெட்டிப்போட்டார்கள். இப்பொழுதும் நீங்கள் எச்சரிப்பை பொருட்படுத்தவில்லை என்றால், அங்கே ஒரே ஒருகாரியமே விடப்பட்டுள்ளது, அது நியாயத்தீர்ப்பு.

37. ஓ, இந்த அமெரிக்கா அதனுடைய ஒழுக்கமற்ற தன்மையும், அதனுடைய

மெத்தனத்தினால் கீழ்தரமான நிலைக்கு சென்ற ஒரு நேரம் எப்பொழுதாவது இருந் திருக்குமானால் அது சரியாக இப்பொ ழுதே.... கடற்கரைக்கு கடற்கரை சுவிசே ஷம் பிரசங்கிக்கப்பட்டு, அடையாளங் ளும், அற்புதங்களும் நடப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன, மேலும் மகத்தான அற்புதங்ளும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. மேலும் அவர்களோ தங்களு டைய காரியம், களியாட்டம், மது குடித் தல், புறக்கணித்தல், கேளிக்கை முதலான வைகளில் தொடர்ந்து செல்கின்றனர்.



38. அமெரிக்காவில் ப்ராட்டஸ்டன்ட் சபைகளின் இரண்டு லட்சம் பிரசங்க பீடங்களில், இன்று அவ்விதமான பிரசங்க பீடங்களில் நமக்கு என்ன தேவை என்றால், நாம் பிரசங்கிக்கும் பாவமுள்ள ஜனங்களாகிய இந்த சந்ததியினர் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் இடிமின் னலை முழக்கமிட அஞ்சாத கர்த்தருடைய தீர்க்கதரிசிகளே. “துன்மார்க்க சந்ததியே என்று கூச்சலிடும் ஏசாயாவைப் போன்ற தீர்க்கதரிசிகளே நமக்கு தேவை. மேலும் அவன் எப்படியாக அந்த சந்ததியை கண்டித்து வரப்போகும் நியாயத்தீர்ப்பு களை அவர்களிடம் கூறினான்.

39. ஆனால் இன்று நம்முடைய மிகுதி யான ஊழியக்காரர்கள் அந்த காரியங் களை கூறுவதற்கு அஞ்சுகிறார்கள். அவர்க ளுடைய சொந்த அலுவல்களினிமித்தமாக, எச்சரிப்பின் ஒரு நேரடியான சாட்சியை கொடுப்பதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். காரணம் அவர்கள் தங்கள் ஸ்தாபனத்தை

விட்டும், தங்களுடைய பிரசங்க பீடத்தை விட்டும் இறங்கியாக வேண்டும். அவர்கள் ஒரு வேளை வெளியே செல்ல வேண்டிய தாகவும், மற்ற சபையிலோ அல்லது ஏதோ ஒன்றிலோ அவர்கள் மற்றொரு ஸ்தா னத்தை எடுக்க வேண்டி இருக்கலாம். ஆனால் நம்முடைய பிரசங்க பீடங்களில் அந்த மாதிரியான ஜனங்களை பெற்றிருப் பது மிகவும் மோசமானதாகும். முற்காலத் திய சீர்த்திருத்தத்தின் ஜான் வெஸ்லி, மார்டின் லூத்தர் போன்ற மனிதர்கள் நமக்கு தேவை. இயேசு கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்தின் ஒரு சாட்சியாக இந்த ஜீவியத்திலிருந்து கடந்து போகும்படியாக கருதப்பட்டாலும் கூட, முழுவதுமாக கொடுப்பதற்கும், தங்க ளையே அர்ப்பணிப்பதற்கும் விருப்ப முள்ள பவுலைப் போன்ற ஜனங்கள் நமக்கு தேவை.

40. அது இன்று என்னவாக இருக் கிறது, கல்வியும், சங்கங்களும் மற்றும்

சங்கங்களின் சிறு மூர்க்க வெறிக்கொண்ட நேர்த்தியான காரியங்களும், அவர்களின் சொந்த உணர்ச்சிகளும் சபையில் பரிசுத்த ஆவியானவரின் இடத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றன. இன்று அமெரிக்கா வுக்கு சத்தமிடுவதற்கு நமக்கு என்ன தேவை என்றால், தவறான காரியங்களுக்கு எதிராக சத்தமிடுவதற்கும், வரப்போகும் நியாயத்தீர்ப்பை குறித்து ஜனங்களை எச்சரிக்கை செய்வதற்கும், பயப்படாத, தேவனால் அனுப்பப்பட்ட, பரிசுத்த ஆவி யின் வல்லமையால் நிரம்பின தேவ மனிதர்களே.



41. இந்த தேசம் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பும்படி தேவன் ஒரு போதும் விட மாட்டார். தேவன் அவ்விதம் செய்வா ரானால், அவர் சோதோம் கொமோராவை எழுப்பி, அவர்கள் அப்படிப்பட்ட ஒரு தீய ஜனங்களாய் இருந்தபோது, அவர்களை என்றென்றைக்குமாய் மூழ்க்கடித்ததற்காக மன்னிப்பு கேட்க வேண்டியவராய் இருக் கிறார். தேவனுடைய பார்வையில் நாம் விதிவிலக்கானவர்களல்ல. அது நம்மு டைய அரசியலுக்கு வருகிற போதும், அது நம்முடைய அரசாங்கத்திற்கு வருகிற போதும், இன்று நாம் வந்துக் கொண் டிருக்கும் பாதை எப்படி இருக்கிறது. தூணிலிருந்து கம்பம் வரை அது அழுகிப் போயுள்ளது. இனிமேலும் நேர்மை என்பது கிடையாது. அது தேவனில் மாத்திரமே இருக்கிறது.

42. ஓ, யு.எஸ் ஐக்கிய நாடுகள் மீது நாம் நம்பிக்கை வைத்திருப்பதாக கூறுகி றோம். யு.எஸ் ஐக்கிய நாடுகள் சபையில்

ஐந்து வருடங்களுக்கு முன்னால் ஐம்பத்தி ஒன்று சதவிகிதத்தை காட்டிலும் இப்பொழுது அதிகமானவர்கள் கம்யூனிஸ்டுகளாக இருக்கிறார்கள். ஜீவிக்கிற தேவனுடைய. வார்த்தையைத் தவிர நம்பிக்கை வைப்பதற்கு அங்கே எதுவுமில்லை. அரசியல் மீதும் வைக்க முடியாது. நாம் எதன் மீதும் நம்பிக்கை வைக்க முடியாது.



# சுகபோகமாய் வாழ்கிறவள்
# உயிரோடே செத்தவள்



# சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஜீவன், 58-05-19

40. சில காலங்களுக்கு முன்பு நான் கனடாவில் ஒரு பெரிய நகரத்தில் ஒரு கூட்டத்தை கொண்டிருந்தேன். இந்த குறிப்பிட்ட கூட்டத்தில், அமெரிக்காவில் உள்ள குறிப்பிட்ட விடுதியில் ஒரு யூபிலியை கொண்டாடுவதற்கு அங்கு ஒரு அமெரிக்க குழு வந்தனர். அன்று அவர்கள் வருகையில், அனைவரும் குடித் துக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். அது கிட்டத்தட்ட என்னுடைய சொந்த நாட்டை குறித்து வெட்கமடைய செய்தது. அந்த இரவில், நான் அரங்கத்தை விட்டு புறப்பட்ட போது, இந்த மகத்தான பெரிய ஹோட்டலின் அறைக்கு சென்றுகொண் டிருந்தேன். நான் ஏறக்குறைய பத்து

அல்லது பதினைந்தாவது மாடி வரை சென்றேன், லிப்டில் எங்கும் விஸ்கி பாட்டில்கள் குவிந்து கிடந்தன. மேலும் கீழ் வரவேற்பு முகப்பு அறையில் அவர்கள் தொடர்ந்து குடித்துக் கொண்டு இருந்தார்கள். நான் லிஃப்ட்-ன் உதவிக் கார சிறுவனிடம் "இவை அனைத்தும் என்ன?" என்று கேட்டேன்.

" அவன் நிச்சயமாகவே ஒரு நேரத்தை கொண்டுள்ளார்கள்" என்றான்.

41. அதன்பிறகு என்னுடைய தளத்தில் நான் இறங்கி ஓரமாக நடந்துசென்றேன். அரங்கின் கடைமுனையிலிருந்து ஒரு சத்தம் வருவதைக் கேட்டேன். நான் பார்த்த போது அங்கு இரண்டு அமெரிக்க வாலிப பெண்கள் வெறுமனே தங்களுடைய உள்ளாடைகளை மாத்திரம் அணிந்தவாறு நின்று கொண்டிருந்தனர். இருவரும் தங்க ளால் இயன்ற அளவு குடித்திருந்தார்கள். ஒருவேளை, விவாகமான பெண்கள்,

ஏனென்றால் அவர்கள் முப்பது வயது கடந்த ஸ்திரீகள், வெறுமனே உள்ளாடை மட்டுமே அணிந்தவர்களாய், ஒரு விஸ்கி பாட்டிலோடு, அந்த அரங்கினூடாக வந்து கொண்டிருந்தனர். ஆண்கள் அவர்களை அறைக்கு அறை இழுத்து கொண்டிருந் தனர்.

அந்த பெண்கள், சில வேடிக்கைகளை செய்து கொண்டிருந்தனர். ஒருவேளை அவர்களுடைய கணவர்கள் வீட்டில் குழந்தைகளை கவனித்துக் கொண்டிருந் திருக்கலாம். அல்லது வேலைக்கு அமர்த் தப்பட்ட யாராவது ஒருவர் அவர்களு டைய குழந்தைகளை கவனித்துக் கொண் டிருந்திருக்கலாம். அவர்களை நீங்களே கவனித்து கொள்ளும் படியாகதான் தேவன் உங்களுக்கு பிள்ளைகளை அளித் தார். அது தேவனில் உங்களுடைய கடமை யாய் உள்ளது. அது பிள்ளைகளின் குற்றங் கள் அல்ல, ஆனால் அது நம்முடைய பெற்றோர்களின் குற்றமாகவே உள்ளது.

சில தாய்மார்கள் அவர்களுடைய கடமை யிலிருந்து விலகி அகன்று சென்றிருக் கின்றனர். அவர்களுடைய பிள்ளைகளை தானாக வளரும்படி விட்டுவிட்டு, அவர்கள் மதுபான விடுதிகளுக்கு ஓட விரும்பி, அவ்வாறு இரவு முழுவதும் தொடர்ந்து செல்ல விரும்புகின்றனர். அப்படிப்பட்ட நரம்புகோளாருடைய காலத்தில் அவர்கள் வளருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தேவன் அந்த குழந்தையை வளர்த்து, கவனித்து கொள் ளும்படியாக உங்களுக்கு கொடுத்திருக் கின்றார்.

42. மேலும் இந்த ஸ்திரீகள், அவ்வாறு தள்ளாடிக்கொண்டு வருகையில், அவர்கள் இருவரும், பாதையின் நடுவில் நின்று, அவர்களுடைய சிறு பாவாடைகளை கால்களுக்கு மேலே இழுத்து தூக்கியவாறு, "ஊப்பீ" என்று கூச்சலிட்டு "இது தான் வாழ்க்கை" என்று கூறினார்கள்.

என்னால் அதற்கு மேல் பொறுத்திருக்க முடிவில்லை. நான் நின்று கொண்டிருந்த அந்த இடத்திலிருந்து நடந்து சென்று, "பெண்மணிகளே, சற்று பொறுங்கள் ஒரு நிமிடம் நான் உங்களிடம் பேச விரும்பு கிறேன். நீங்கள் அதை தவறாக அரத்தம் கூறினீர்கள்?. 'நாம் மது அருந்துவோம், இது தான் ஜீவியம்.' என்று சொல்லு கின்றீர்கள்? ". நான் அந்த இரண்டு பேரின் தோள்களை பிடித்தேன்; "நீ ஒரு விவாக மான பெண்ணா?" என்று கேட்டேன்.

"அது உமக்கு எதற்கு" என்று அவள் கூறினாள்.

"நான் உன்னிடம் கேட்க விரும்புகி றேன். நீ ஒரு விவாகமான பெண்ணா?" என்று கேட்டேன்.

அவள், "நிச்சயமாகவே, நான் பொழு துப்போக்குக்காக வேடிக்கை செய்தேன்." என்றாள்.

நான் சொன்னேன், "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்', என்று வேதம் கூறுகிறது." "நான் அமெரிக் காவை சேர்ந்த ஒரு ஊழியக்காரன். நான் இங்கே இந்த பனி அரங்கிற்கு வந்திருக் கிறேன். நீயோ அமெரிக்க தேசத்தின் பெயருக்கும் தாய்மைக்கும் நிந்தையை கொண்டு வருகிறாய். உன்னைக் குறித்து நீயே வெட்கமடையவில்லையா? உங்களு டைய கணவர்கள் எங்கே?" என்றேன்.

43. அவர்கள் கண்களை உருட்டத் தொடங்கி ஒருவரை ஒருவர் பார்த்தனர். மேலும் அவர்கள் பின்னால் நழுவிச்செல்ல தொடங்கினார்கள். நான் அவர்களுடைய கரங்களை பிடித்தேன். "சற்றே ஒரு நிமிடம். நீங்கள் தேவனை சந்திக்கும் போது என்ன செய்ய போகிறீர்கள்? இன் றிரவு இந்த குடிபோதையின் குழப்பநிலை யில், இந்த நிலையில் நீங்கள் மரித்தால் என்னவாயிருக்கும்? உங்களுக்கு என்ன சம்பவிக்கும்? நீங்கள் வாழ்க்கையை

பெற்றுள்ளதாக சொல்லுகிறீர்கள். நீங்கள் பாவத்திலும் அக்கிரமத்திலும் மரித்து கொண்டிருக்கின்றீர்கள்" என்று நான் கூறினேன். அவர்கள் என்னுடைய கரங் களை உதறிவிட்டு விலகி, அவர்கள் அரங் கினூடே சென்று, மிகச்சொற்பமான ஏதோ வொரு உடையுடன் என்னுடைய பார்வை யிலிருந்து தூரே சென்றனர்.

அதுதான் ஜீவியம் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அது மரணம் ஆகும். ஒரு மனிதன் அதை செய்வதற்கான தாகத்தை உண்டுபண்ணுவது எது? எது ஒரு மனிதனை அப்படி செய்யும்படி விரும்ப பண்ணுகிறது? ஏனென்றால் தேவன் அவர்களை அவ்விதமாக உண் டாக்கியுள்ளார். தேவன் ஒரு மனிதனை தாகம் அடையும்படி உண்டாக்கினார். ஒரு மனிதன் தாகம் கொள்ளும்படி அதிகமாக காரியங்களை அவனுக்குள் உண்டாக்கி னார். ஆனால் தேவன் அந்த தாகத்தை அவரில் தாகம் கொள்ளும்படியாக

வைத்தார். ஆனால் சாத்தான் இதை நித்திய ஜீவனிலிருந்து மரணத்திற்கு புரட்டிப் போட்டு, அதை நீங்கள் விரும்பும் படி செய்கிறான்.

44. இப்படிப்பட்ட காரியங்களுக்காக நீங்கள் ஏங்குவதன் காரணம், தேவன் இருக்க வேண்டிய இடத்தை நீங்கள் சாத்தானுக்கு கொடுப்பதினால் தான் . ஓ, அவன் அதை செய்வதில் சிறந்தவன். நீங்கள் ஏதோவொன்றிற்காக தாகம் கொள் ளத்தான் போகின்றீர்கள், ஏனென்றால் நீங்கள் தாகம் கொள்ளும்படியாகவே உண்டாக்கப்பட்டுள்ளீர்கள். தேவன் உங்களை தாகம் கொள்ளும்படி உண்டாக் கினார், நீங்களோ அதை உலக காரி யங்களோடு திருப்தி செய்துகொள்ள முயற் சிக்கின்றீர்கள். அன்றியும் நீங்கள் உலகத் தையோ அல்லது உலகத்தின் காரியங் களிலோ அன்புகூர்ந்தால் உங்களிடத்தில் தேவனுடைய அன்பு இல்லை என்று வேதம் கூறுகிறது. நீங்கள் அந்த

ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த காரியத்தை குடிப்பதனாலும், திரைப்பட காட்சிகளுக்கு செல்வதாலும், சூதாட்டத்தினாலும், நடனங்களாலும் திருப்தி செய்து கொள்ள முயற்சிக்கின்றீர்கள்; அவை அனைத்தும் பாவத்தின் சம்பளமாய் உள்ளது. அதை செய்வதற்கு உங்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. உங்களுடைய சகோதரனாக எனக்கு செவிகொடுங்கள். சாத்தான் ஏதோ சிலவற்றை உங்கள் மீது வைக்கிறான். ஆனால் நீங்களோ அதை அறிவதில்லை.

45. நம்முடைய ஜனங்களுக்கு என்ன சம்பவித்தது? நம்முடைய சபைகளுக்கு என்ன சம்பவித்தது? இன்றையதினமுதல் ஒரு வருடத்தில் இந்த நகரத்தில் ஒரு ஏழையான மனிதனும் கூட இருக்கமாட் டான் என்பதை என்னால் உங்களுக்கு காண்பிக்க முடியும். இந்த நகரத்தில் ஒரு மலிவான ஏழ்மையான வீடும் இராது. தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத் துக்கொள்ளும் அந்த ஜனங்கள் மதுபானங்

களுக்கும், பீர் மற்றும் சிகரெட்டுகளுக்கும் செலவிடும் பணத்தை எடுத்து அதை ஒருமித்து குவிப்பார்களாயின், இந்த எல்லா பொருளாதார பற்றாக்குறைவு துயரநிலைகளையும் நீங்கள் முடிவுக்கு கொண்டுவரமுடியும். அங்கே எத்தனை இருக்கிறது என்றும், ஒவ்வொரு வருஷமும் சிகரெட்டுகளுக்காக எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது என்றும் எண்ணிப்பாருங்கள். இவ்விதமான பெரிய மகத்தான வெகுமதிகள் மற்றும் காரியங்களை அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்குப் பதிலாக ஏன் அவற்றை கைவிட்டு விடக்கூடாது ?

அன்றியும் எல்லா நேரங்களிலும், அது புற்றுநோய், புற்றுநோய், புற்றுநோயாய் உள்ளது, என்று மருத்துவர்கள் முழுவதுமாய் கூறுகின்றார்கள். இந்த அமெரிக்க ஸ்திரீகளோவெனில் அதை இடைவிடாமல் தங்களுடைய தொண்டைக்குள்ளே உறிஞ்சி இழுத்து கொண்டிருக்கிறார்கள்.

உங்களுக்கு ஒரு பகட்டான நேரம் உள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள், இல்லையா? நான் கிறிஸ்தவர்களிடம் பேசவில்லை. தங்களை கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக்கொள்கின்ற உங்களிடம் தான் பேசிக் கொண்டிருக்கிறேன். நம்மு டைய சபைகளுக்கு சம்பவித்தது என்ன? நாம் சற்றே அதனூடாக சென்று, பிசாசு எங்கு-எவ்வாறு-எப்படிப்பட்ட ஒரு வர்த்தகனாக இருக்கிறான் என்பதை பார்ப்போம்.

46. நீண்ட காலத்திற்கு முன்பு நம்முடைய அனைத்து நவநாகரிகங்களும் பாரிஸ் பட்டணத்திலிருந்து (Paris) வந்த வைகளாக இருந்தது. இப்பொழுது அது பாரிஸிலிருந்து வருவதில்லை. அதை பெறுவதற்கு பாரிஸ்காரர்கள் ஹாலிவுட் டுக்கு வருகின்றார்கள். பரிசுத்தகூட்டத்தை சார்ந்த ஜனங்களே, நீங்கள் பட காட்சி களுக்கு செல்வதும், அப்படிப்பட்ட மோச

மான நாடகங்களை பார்ப்பதும் உங்க ளுக்கு தவறான காரியமாக இருந்தது; ஆனால் பிசாசு உங்களை அதிலிருந்து அகன்றுவிட செய்துவிட்டான். அவன் அதை தொலைக்காட்சிப் பெட்டியில் வைத்து சரியாக அதை உங்களுடைய சொந்த வீட்டிற்குள்ளேயே அமர்த்தி விட்டான். அது சரியே.

சிறுவர்கள் காவல்துறை அதிகாரிகள் மீது துப்பாக்கியால் சுடுவதும், குத்திக் கொலை செய்வதும் போன்றவற்றையும் மற்றும் இரண்டு துப்பாக்கிகளுடன் முனை யில் நின்று கொண்டிருக்கின்றவற்றையும் எல்லாம் காண்பதில் ஆச்சரியம் ஒன்று மில்லை. அவர்கள் அந்த காரியங்களை பார்க்கின்றனர். அவர்கள் அதற்குள்ளா கவே வளர்க்கப்படுகின்றார்கள்.

சபை உலக காரியங்களிருந்து வெளியே வந்து தன்னுடைய ஸ்தானத்தை எடுத்து கொள்ளவேண்டிய நேரமாக

இருக்கின்றது. நீங்கள் அதை அறிவீர்கள். பரிசுத்த கூட்டத்தில் இருக்கும் கிறிஸ்தவ ஸ்திரீகள் தலைமயிரை குட்டையாக வைத்து கொள்வது முன்பு தவறான காரியமாக இருந்தது. என்ன சம்பவித்தது? குட்டை தலைமயிரோடு நீங்கள் சபைக்குள் செல்ல முடியாதிருந்தது எனக்கு ஞாபக மிருக்கிறது. முதலிலேயே அது தவறாக இருந்தது; இன்னுமாக அது தவறு தான். ஒரு ஸ்திரீ தன்னுடைய தலைமயிரை கத்தரிப்பாளானால், அவளுடைய கணவன் அவளை விவாகரத்து செய்து அவளிடமிருந்து விலகிவிட அவனுக்கு உரிமை உண்டு என வேதம் கூறுகிறது. அது முற்றிலும் சரி. நீங்கள் ஏன் அதை செய்கிறீர்கள்? நவநாகரிக காரியங்களை நீங்கள் பின்பற்றுவதற்காகவே தான்.

இப்பொழுது, இவைகளுக்கு பின்பு நீங்கள் என்னை விரும்ப போவதில்லை, ஆனால் அந்த நியாயத்தீர்ப்பு மன்றத்தில், நீங்கள் ஏதோவொன்றை கண்டு கொள்ள

போகின்றீர்கள். ஒரு ஸ்திரீ தன்னுடைய தலைமயிரை கத்தரித்தால், அவள் அவளுடைய தலையை கனவீனப்படுத்துகிறாள், அதாவது புருஷன் அவளுடைய தலையாயிருக்கிறான். அவள் அவமானத்திற்குரிய ஒரு நபராய் இருந்தால், அவள் விலக்கப்பட வேண்டும். முன்னர் அது தவறாய் இருந்தது, ஆனால் ஏதோவொன்று சம்பவித்துவிட்டது.

47. பரிசுத்த கூட்டத்தை சேர்ந்த ஸ்திரீகள் இப்படிப்பட்ட சிறிய பழைய உடைகளை அணிந்து கொண்டு, அவர்கள் வீட்டு வாசலுக்கு வெளியே சென்று, தங்களுடைய வாசலில் புற்களை வெட்டிக்கொண்டும், அரைக்கால் சட்டையோடு தெருவில் மேலும் கீழும் நடந்து கொண்டும், உங்களுடைய பிள்ளைகளையும் அதைச்செய்ய அனுமதிக்கின்றீர்கள்... பின்பு, "தேவனே, எங்களுக்கு ஒரு எழுப்புதலை அனுப்பும்" என்றும் நீங்கள் சொல்லுகின்றீர்கள். தேவன் எவ்வாறு ஒரு

கூட்ட அசுத்தத்தின்மேல் ஒரு எழுப்புதலை உண்டாக செய்வார்? அதை செய்ய முடியாது. நாம் ஏன் எழுப்புதலை பெற்றுக் கொள்ளவில்லை என்பதை இப்பொழுது கண்டு கொள்ள போகிறோம். நீங்கள் ஏன் அதை செய்கிறீர்கள்? நீங்கள் பாருங்கள், உலகமானது கசிந்து உள்ளே ஊடுருவி தொடங்கியிருக்கிறது.

தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்து கொள்கின்ற அநேக ஜனங்கள், புதன் கிழமை இரவு ஜெப கூட்டத்திற்கு செல்வதற்கு, ஒரு சபைக்கு போவதற்கு பதிலாக, "நாங்கள் சூசியை நேசிக்கின்றோம்" அல்லது அதைப்போன்ற அர்த்தமற்ற எல்லாவித காரியங்களையும் கேட்பதற்காக வீட்டிலே தங்கியிருக்கிறார்கள். உங்களுக்குள்ளே என்ன இருக்கிறது, நீங்கள் எதற்காக தாகமாயிருக்கிறீர்கள் என்பதையே அது காண்பிக்கிறது. அது தான் உங்களுடைய குணாதிசயம், உங்களுடைய நடத்தை ஆகும்.

48. ஸ்திரீகளாகிய நீங்கள், காலையில் 10 மணிக்கு ஜெப கூட்டத்தை கொண்டிருக்கவேண்டிய போது, நீங்கள் ஆர்தர் கோட்ஃபிரே (Arthur Godfrey) போன்ற ஏதோ பழைய தேவபக்தியற்ற காரியத்தையும் அவனுடைய அசுத்தமான நகைச்சுவை துணுக்குகளையும், மற்றும் அப்படிப் பட்ட கூட்ட பெண்களுடனான காரியங்களையும் நீங்கள் கேட்டுக்கொண்டு, பின்பு உங்களை கிறிஸ்தவர்கள் என்றும் அழைத்துக் கொள்கிறீர்கள். தொடர்ந்து செல்லுங்கள். அதுதான் உண்மை.

"சகோதரன் பிரான்ஹாமே, நான் அரைக்கால் சட்டை அணியவில்லை. நான் முழுகால் சட்டைதான் அணிந்துள்ளேன்" என்று நீங்கள் கூறலாம். அது அதைவிட மோசமாயிருக்கிறது. ஒரு ஸ்திரீ ஒரு புருஷனுடைய உடைகளை தரிப்பது தேவனுடைய பார்வைக்கு அருவருப்பாக இருக்கிறது என்று வேதாகமம் கூறுகின்றது;

தேவன் மாறுவதில்லை. நீங்கள் அவ்வளவு இறுக்கமான இந்த சிறிய பாவாடைகளை அணிந்து கொண்டு, வெளிப்புறம் சரீரம் தெரியும் அளவிற்கு மிக இறுக்கமாக அணிந்து தெரு வீதியில் செல்கிறீர்கள். மேலும் உங்களை நீங்களே "பரிசுத்தமான ஸ்திரீ" என்றும் அழைத்து கொள்கிறீர்கள். தேவனுடைய ஒரு குமாரத்தி அவ்விதமாக தான் நடந்து கொள்வாளா?

கவனியுங்கள். "பிரசங்கியே, அவ்வித மான உடைகளை மாத்திரம் தான் அவர்கள் விற்பனை செய்கின்றார்கள்" என்று நீங்கள் கூறலாம். ஆனால் அவர்கள் இன்னுமாக தையல் இயந்திரங்களையும் தயாரித்து விற்பனை செய்கிறார்களே. நீங்கள் எந்த சாக்குப்போக்கும் கூறமுடியாது. அன்றி யும், உங்களுடைய உடைகளை நீங்களே உருவாக்கி கொள்ளும் பொருட்களையும் அவர்கள் விற்பனை செய்கின்றார்கள். அது வலியை உண்டாக்குகிறது என்று எனக்கு தெரியும், ஆனால் அது உங்களுக்கு

நன்மையாக இருக்கிறது. அதுதான் சத்திய மாகும். அதை தான் வேதாகமம் கூறு கின்றது.

49. அதுதான்... நீங்கள் பாருங்கள், நாம் ஒரு எழுப்புதலை கொண்டிருக்க முடியாது. அது தான் காரணம். ஓ, நிச்சயமாக, அது உங்களை கடினமாக்கு கின்றது- உள்ளே செல்கின்றது-செய்கின் றது... ஆனால் அது துவக்கத்தில் தவறாக இருக்குமானால், இப்பொழுதும் அது தவறு தான். ஏதோவொன்று சம்பவித்தது. அது இந்த நிலைக்கு வந்துவிட்டது. ஒரு எழுப்புதல் உண்டாவதற்கான எந்த அஸ்தி பாரமும் இல்லை. தேவன் அதை தடை செய்திருக்கும் போது உங்களால் அதை எப்படி செய்ய முடியும்?

இப்பொழுது, நீங்கள் "ஸ்திரீகளாகிய எங்கள் மீது நீர் மிகவும் கடுமையாக பேசினீர் " என்று கூறலாம். சரி, புருஷர் களே, நீங்கள் இங்கு இருக்கிறீர்கள். எந்த

மனிதனாவது தன்னுடைய மனைவி அவ்விதமான உடைகளை அணியவும், புகை பிடிக்கவும் அனுமதிப்பானானால், நீங்கள் எதிலிருந்து உருவாக்கப்பட்டீர்கள் என்பதையே அது காட்டுகிறது. நீங்கள் ஒரு புருஷனாக இருப்பதை குறித்து நான் சிறிதளவு மரியாதையை கொண்டுள்ளேன். நீங்கள் வீட்டினுடைய தலைவனாக இருக்கவேண்டியவர்களாய் உள்ளீர்கள். என்ன சம்பவித்தது? ஏதோவொன்று தவறாக போய் விட்டது.

50. இப்பொழுது, ஸ்திரீகளே, முன்பு நீங்கள் நகத்தில் வர்ணங்களை போட்டுக் கொண்டிருந்ததில்லை, ஒருபோதுமே.... உங்களுடைய வாயில் போட்டுக்கொள் கின்ற அந்த பொருள் அது என்ன? அது என்னவாக இருந்தாலும் சரி, அதை குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அதை ஒரு நகைச்சுவைக்காக சொல்ல வில்லை. அது என்னவாக இருந்தாலும், நீங்கள் இடும்..உதடு - உதட்டு சாயம், அது

என்னவாக இருந்தாலும் சரி. முன்னர் அதை நீங்கள் செய்வது தவறான காரிய மாக இருந்தது, ஆனால் இப்பொழுதோ பெந்தேகோஸ்தே ஜனங்களாகிய உங்க ளிடையே நிச்சயமாகவே அது ஒரு பொது வான காரியமாகி விட்டது. என்ன சம்ப வித்தது?

வயதான ஒரு மெத்தோடிஸ்ட் பிரசங்கி ஒரு சிறிய பாடலை பாடும்படி - என்னிடம் சொல்வதுண்டு.

நாம் தடைக் கம்பிகளை தாழ்த்தி விட்டோம்.

நாம் தடைக் கம்பிகளை தாழ்த்தி விட்டோம்.

நாம் பாவத்துடன் சமரசம் செய்து கொண்டோம்.

நாம் தடைக் கம்பிகளை தாழ்த்தி விட்டோம்;

செம்மறி ஆடுகள் வெளியேறி விட்டன,

ஆனால் வெள்ளாடுகள் எவ்வாறு உள்ளே வந்தன?

நீங்கள் தடைக் கம்பிகளை தாழ்த்தி விட்டீர்கள்.. அதுதான் அதை செய்தது, ஏனெனில் தன்னுடைய ஊழியமானது தேவனிடமிருந்து பெற்ற கட்டளை என்று எண்ணுவதற்கு பதிலாக அதை ஒரு உணவு சீட்டாக நினைத்துக் கொண்டிருக்கும் அந்த சிறிய பிரசங்கியுடன், ஒரு பெலவீனமான பிரசங்க பீடத்தை நீங்கள் கொண்டிருந்தீர்கள். அவன் அதை குறித்து ஏதாவதொன்றை கூறினால், நீங்கள் அவனை சபைக்கு புறம்பாக்கி வெளியே தள்ளிவிடுவீர்கள். அவன் அதை குறித்து ஏதாவதொன்றை கூறவில்லை என்றால் தான் அவன் தள்ளப்பட வேண்டியவனாயிருக்கிறான்.

ஆனால், இதை நினைவில் வையுங்கள். விஞ்ஞானம் உன்னை எவ்வளவு தான் பாதுகாப்புக்குள் வைத்திருந்தாலும் சரி, நீ பாவம் செய்யும் போது தேவன் உன்னை கண்டுபிடித்து விடுவார். ஒரே ஒரு பாதுகாப்புதான் இருக்கிறது, அது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக மாத்திரமே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 58-01-08 சுவற்றின் மேல் எழுதப்பட்ட கையெழுத்து

10. ஆகவே, செழிப்பான அந்த பள்ளத்தாக்கிலே பாபிலோன் அமைந் திருந்து, யூப்ரடிஸ், டைக்ரிஸ் என்ற ஆறுகளால் சூழப்பட்டதாய் அது நீர் பாய்ச்சப்பட்டது. அது ஒரு பெரிய விவசாய மையமாயிருந்தது. பாபிலோன் ஒரு மகா பெரிய பட்டணமாயிருந்தது. ஏறக்குறைய அந்த பட்டணத்தின் சுற்றளவு 120 மைல்களாகும். ஒவ்வொரு பக்கத் திலும் சுமார் 30 மைல்கள் என்ற விதத்தில் அதன் சுற்றளவு சுமார் 120 மைல்களாக இருந்தது. பாபிலோனின் வீதிகளின் அகலம் 200 அடிகள் என்று கூறப்படு கிறது. அதன் மதில்கள் 80 அடி அகலமும், 200 அடி உயரம் கொண்டதாயும்

இருந்தது. அந்த சுவர்களைச் சுற்றி இரதங்களைக் கொண்டு இரத ஓட்டப் பந்தயமே நடத்தலாம். அதன் கதவுகள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தது. அந்த கதவுகள் அப்பொழுதே 200 அடி அகலமுள்ளதாய் இருந்தது. சரியாக, பட்டணத்தின் மையத்தில் அரண்மனை யும், அந்த அரண்மனையே சிங்காசன முமாய் இருந்தது.

அந்த மகா பெரிய பட்டணத்தின் மையத்தின் வழியாக பெரிய நதியான யூப்ரடிஸ் ஓடினது. நீங்கள் அதை கவனிப்பீர்களேயானால், அது பிசாசின் பட்டணமாய் இருக்கிறது. ஏனெனில், அது தேவனுடைய பட்டணத்தின் மாதிரியாக அதாவது சிங்காசனத்திற்கு முன்பாக ஜீவ நதி ஓடினது போன்று அது கட்டப் பட்டிருந்தது. இந்த பட்டணத்தில், அவர்க ளுடைய மதில்களை சுற்றிலும், பெரிய ஊசலாடும் தோட்டங்கள் இருந்தன.

11. அது, தான் அறிந்த உலகத்தை தனது சவுக்கினால் அடக்கும் வரைக்கும், அந்த நாட்களில் அது அவ்வளவு பெரிய வல்லமையுள்ள ஒரு தேசமாய் இருந்தது. முழு உலகமும் அதற்கு கப்பம் கட்டிக் கொண்டிருந்தது. அது விஞ்ஞானத்தில் மேலும் வளர்ந்திருந்து, விஞ்ஞானம் தற்சமயம் உண்டாக்கக் கூடிய காரியங்கள் எல்லாவற்றையும் அன்றைக்கு அது உடையதாயிருந்தது. தற்காலத்தில் உள்ள இரதங்களையும், தற்காலத்தின் மாதிரி களையும் போன்று, அதிக வல்லமை வாய்ந்த போர் ஆயுதங்களையும், உலோ கங்களில் சிறந்தவைகளையும் உடையதா யிருந்தது. உலகத்தின் மற்ற ஏனைய பாகங்களுக்கும் அது தலை சிறந்ததாய் காணப்பட்டது.

12. இன்றிரவு நாம் பேசிக் கொண்டிருக் கின்றதான இந்த சம்பவம் நிகழ்ந்த சமயத்தில், அந்த சுவர்களுக்குள்ளாக

பெல்ஷாத்சார் என்பவன் ராஜாவாக இருந்தான். பெல்ஷாத்சார் ராஜாவைப் பற்றி, "அவனுடைய தகப்பனார் நேபுகாத் நேச்சார்" என்று வேதம் கூறுகிறது. ஆனால் உண்மையாகப் பார்க்கப் போனால், அவன் அவனுடைய தாத்தாவாகிய நேபுகாத் நேச்சாருக்குப் பின் பட்டத்திற்கு வந்தான்.

13. பொன்னினால் ஆன தலையாகிய புறஜாதியாரின் ராஜ்ஜியத்திற்கு நேபுகாத் நேச்சார் துவக்கமாயிருந்தான் என்று உங்களில் அநேகருக்கு நினைவிருக்கும். அவன் அநேக மைல்களுக்கு அப்பால் உள்ள எருசலேமுக்குள் ஊடுருவி, யூதர்களை கைப்பற்றி, அவர்களை தன் ராஜ்ஜியத்திற்குள் கொண்டு வந்து, அவர்களை அடிமையாக்கி, அவர்களுடைய விஞ்ஞானிகளை உபயோகப் படுத்தி... இந்த விதமாக அவன் செய்தான்.

14. ரஷ்யா, ஜெர்மனிக்குள் போன போது செய்தது போன்று அது இருந்தது. அதன் நிமித்தமாகத்தான் அவர்களிடம் அணுகுண்டு முதலானவைகள் இருக்கின்றன, அவர்கள் அந்த ஜெர்மானிய விஞ்ஞானிகளைக் கொண்டு வந்துவிட்டார்கள். அக்காரியத்தின் நிமித்தமாகத் தான் இன்றைக்கு ரஷ்யா இவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர். அவர்களிடத்தில் அப்படிப்பட்ட காரியம் கிடையாது, ஆனால் நேபுகாத்நேச்சார் யூதர்களுக்கு செய்தது போன்று, அவர்கள் போய் அந்த காரியங்களை கொண்டு வந்தார்கள்.

15. மேலும், இந்த சமயத்தில் தான் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய தானியேல் என்னும் பேர் கொண்ட நீதிமானாகிய ஒரு மனிதன் சிறை கைதியாய் கொண்டு போகப்பட்டான் என்று காண்கிறோம். அவன் நேபுகாத்நேச்சாரின் ஆட்சிகாலத்

தில் வானசாஸ்திரிகள் (astrologers) போன்றோருக்கும், ஞானிகள், சாஸ்திரிகள் (the Magi) போன்ற எல்லாருக்கும் அதிபதியாக (prince) விளங்கினான்.

16. இப்பொழுது, பெல்ஷாத்சார் ஆட்சியை எடுத்துக் கொண்டான். பெல் ஷாத்சார் ஒரு பொல்லாங்கான மனிதனாக இருந்தான். அவன் எதற்கும் கவலைப் படுவதில்லை .

17. மேலும், பாபிலோன் ஜனங்கள் எல்லாரும் தாங்கள் அப்படிப்பட்டதான ஒரு பாதுகாப்பிற்குள் இருப்பதாக உணர்ந் தார்கள், அதாவது ஒரு முறை கதவுகளுக்கு உள்ளே வந்து விட்டு, அந்த கதவுகள் மூடப்பட்டுவிட்டால், அதாவது 200 அடி உயரமும், 80 அடி அகலமும் உள்ள மதில்களுக்குள் வந்து விட்டால்... அந்த ஜனங்கள், அந்த மதில்களுக்குள் எப்போர்ப்

பட்டதான ஒரு பாதுகாவலை உணர்ந்திருப்பார்கள் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

18. ஆனால், இதை நினைவில் வையுங்கள். விஞ்ஞானம் உன்னை எவ்வளவு தான் பாதுகாப்புக்குள் வைத்திருந்தாலும் சரி, நீ பாவம் செய்யும் போது தேவன் உன்னை கண்டுபிடித்து விடுவார். ஒரே ஒரு பாதுகாப்புதான் இருக்கிறது, அது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக மாத்திரமே.

19. இப்பொழுது, இன்றைக்கு நாம் ஜீவிக்கின்றதான இதே மாதிரியான நவீன நாகரீகம் கொண்ட, இந்த மிகைப்படுத்தப்பட்ட (fabulous) அமெரிக்காவைப் போல, உலகின் முன்னேற்றமடைந்த தேசமாக இருப்பதின் மிகப்பெரிய முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாய் அவர்கள் இருந்தார்கள். எனக்கு ஏதோ ஒரு வித கலக்கமாயுள்ளது, அவர்களையொத்த

அதேவித மனப்பான்மையை நாமும் உடையவர்களாய் இருக்கின்றோமோ என்ற பயம் வருகிறது. மிக சிறந்த விஞ்ஞானிகள், மிக சிறந்த இயந்திர துப்பாக்கிகள், அணுகுண்டுகள், மிக வேகமாக செல்லக்கூடிய ஆகாய விமா னங்கள் இவைகள் எல்லாம் இருக்கின்ற படியினாலும், உலகத்தின் முன்னேற்றமான தேசமாய் இருக்கின்றபடியினாலும், தேவன் இல்லாமலேயே எப்படியோ நமக்கு ஒரு பெரிய பாதுகாப்பு இருக்கிற தென்று நாம் உணர்ந்து கொண்டிருக் கிறோம்.

20. அது மிகவும் ஒரு அழகான மாதிரியாய் (pattern) இருக்கிறது. தேவன் மாறுவது கிடையாது. பாவத்தின் மீது அவருக்கு இருந்த மனோபாவம், அன்றைக்கு இருந்தது போன்றே இன்றைக்கும் இருக்கிறது. இங்கே கீழே

எந்த விதமான ஒளிப்பிடமும் கிடையாது. கிறிஸ்துவுக்குள் மட்டுமே நீ பாதுகாவலாய் இருக்கிறாய்.

21. இந்த மகாப்பெரிய பட்டணத்தில் இருந்தவர்கள், ஒரு பெரிய சேனையாய் வந்து இந்த பட்டணத்தை எதிர்க்க, இந்த உலகத்திலேயே எந்த விதமான வழியும் இல்லையென்பதாக உணர்ந்தார்கள். மகா பெரிதும் உயரமுமான மதில்கள், நவீன ஆயுதங்கள் போன்றவைகளால் அவர்கள் வெளி உலகத்தினின்று பிரிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். மிகவும் கெட்ட தேசமாகிய மேதிய, பெர்சிய தேசத்தாரும், தற்போதைய இந்தியாவிலுள்ள இந்துக்களாகவும் இருக்கிற அவர்கள், எத்தனையோ மைல்களுக்கு அப்பால் நதிக்கரையில் வாய்க்கால்களைத் தோண்டி, யூப்ரடிஸ் நதியை திசைத்திருப்பி, அதன் வழியாக மதில்களுக்கு அடியில் நுழைந்து வருவார்கள் என்பதை அவர்கள் சிறிதும்

அறியாதிருந்தார்கள். அவர்கள் பத்திரமாய் இருக்கின்றோம் என்று உணர்ந்தபோது இப்படியாயிற்று, எல்லா நேரத்திலும் அவர்கள் அவ்விதமே உணர்ந்தார்கள். அவர்கள் அந்த விதமாக உணர்ந் திருப்பார்களானால்... பின்னர் அவர்கள் பாவத்திற்குள் கஷ்டப்பட்டு நடந்து போனார்கள் (wading in sin).

22. சுய தேவையை சந்திக்கக் கூடிய நிலைமை தனக்கு உண்டு என்று உணருகின்ற ஒரு ஸ்தானத்துக்கு ஒரு மனிதன் வரும் பொழுது, அப்போது தான் பாவம் அவனைப் பற்றிப் பிடிக்க ஆரம்பிக்கிறது என்பது போல் தோன்று கிறது. ஒரு சபையோ, தேசமோ, தனிப் பட்ட நபரோ புறம்பே இருந்து தனக்கு ஒரு உதவியும் தேவையில்லை என்று உணரும் வேளையில், பாவம் அவனை ஆள ஆரம்பிக்கின்றது. அது உண்மை. ஜனங்

களுக்கு ஓர் மேன்மையான (superior) உணர்வு உண்டாகும் போது வழக்கமாக பாவம் உட்பிரவேசித்து அவர்களை தின்று போடுவதை நாமும் கூட கவனித்துள்ளோம்.

23. ஆகவே, அவர்கள் கதவுகளை மூடினபோது தாங்கள் மிகவும் பத்திரமாக இருப்பதாக நினைத்துக் கொண்டார்கள். ஆனால், தேவன் பரலோகத்திலிருந்து கீழே நோக்கி பார்க்கிறார். பாவம் எந்த ஒரு தேசத்திற்கும் ஒரு நிந்தையாய் இருக்கிறது.

24. நமக்குள்ளதான எல்லா பெரிய ஆயுதங்கள், அணுசக்தியினால் இயக்கப் படும் நீர்மூழ்கிக் கப்பல்கள், ஒரு வினாடியில் நூற்றுக்கணக்கான மைல்கள் பறக்கக் கூடிய ஜெட் (jet) விமானங்கள், ஒலியின் வேகத்தையும் கடக்கக் கூடியது மான இவைகளைப் பற்றி நான் வியக்கி றேன். ஆனால் ஒன்றை மறக்க வேண்டாம்.

உங்கள் பாவங்கள் உங்களை தொடர்ந்து பிடிக்கும்.

- எண் 32:23

25. இந்த நேரத்தில் அவர்கள் கதவை அடைத்திருந்தார்கள். அவர்கள் பாதுகா வலுக்குள் இருந்தபடியால், அவர்கள் விரும்பினவாறு களியாட்டத்துக்குள் (revelry) இருக்க முடியும் என்று எண்ணி னார்கள். அவர்கள் ஒரு முன்னணி (leading) தேசமாய் இருந்தனர். மற்ற தேசங்களெல்லாம் விஞ்ஞானத்துக்கும், மற்ற உதவிக்கும் இவர்களை நோக்கிப் பார்க்க வேண்டியதாய் இருந்தது.

26. அப்பேர்ப்பட்டதான ஒரு நேரத் திலே ராஜா தனக்கு ஒரு பெரிய கொண் டாட்டத்தை வைத்துக் கொள்ளவேண்டு மென்று எண்ணினான். அவன் ஒரு நாளைக் குறித்து, அதிலே ஒரு பெரிய நாட்டியத்தை அல்லது நான் சொல்லுவது

போன்று ஒரு நவீன ராக் அண்ட் ரோல் (rock and roll) வைக்க தீர்மானித்திருந்தான்; அதற்கு மேல் ஒன்றும் இல்லை. ஆகவே, அவன் நேரத்தைக் குறித்துக் கொண்டு எல்லா புகழ்பெற்றவர்கள், சேவகர்கள், தளபதிகள் மற்றும் அவனுடைய எல்லா மனைவிகள், வைப்பாட்டிகள் யாவருக்கும் அழைப்பு அனுப்பினான்.

27. இப்பொழுது, வைப்பாட்டி என்றால் வெறுமனே ஒரு சட்டப்படியான விபச்சாரி. ஒரு மனிதன் தன்னில் தானேபோதுமானவன் என்று உணரும் போது, அவன் கஷ்டப்பட்டு தானாகவே பாவத்துக்குள் நடக்கிறான் அல்லவா?

28. அவன் நடத்த இருக்கும் அந்த ராக்-அண்டு-ரோல் விருந்தில் கலந்து கொள்பவர்களுக்காக அவனுக்கு கிடைக்கக் கூடிய நேர்த்தியான மதுபானங்கள் எல்லாவற்றையும் அவன் வருவித்தான்.

அவன் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக எண்ணினான். அவன் பத்திரமாய் இருந்தபடியினால், ஒன்றினாலும் அவனை சேதப்படுத்த முடியாது என்று அவன் எண்ணினான். அவன் அரண்மனைக்குப் பின்னால் தோட்டங்களில் ஒன்றில் இந்த பெரிய மதுபான விருந்தை (spree) ஏற்படுத்தி இருந்தான். இப்படி அவர்கள் வெளியே தோட்டத்தில் இருந்தபோது, அது மிகவும் அழகாக அலங்கரிக் கப்பட்டதாய், ஜிகினா தொங்குதிரைகள் போன்ற தோரணங்கள் (tinsel hanging) தொங்கி கொண்டிருக்க, வீரர்களை ஊக்குவிக்க கவர்ச்சி நடன மங்கைகள் (showgirls) மற்றும் அநேக ஸ்தீரிகளையும் அங்கே அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்களுடைய பீர் (beer) மற்றும் மது வகைகள்... அது இன்றைய அருமையான நவீன ராக்&ரோல் அமைப்பு போன்று இல்லையென்றால், வேறு ஒன்று எங்கு

இருக்கும் என்று எனக்கு தெரியவில்லை, சரியாக அது அப்படியே இருந்தது. அவர்கள் எல்லாவற்றையும் ஆயத்தமாய் வைத்து, ஒரு பெரிய கொண்டாட்டமான நேரத்தை உடையதாக்கிக் கொண்டிருந் தனர்.

29. அநேக கல்யாணமான பெண்கள் வந்திருந்தார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. அவர்களுடைய புருஷன்மார் களை, பிள்ளைகளைப் பார்த்துக் கொள் ளும்படியாய் வீட்டில் விட்டு, அவர்கள் சந்தோஷமாய் இருக்க வெளியே போனார் கள். ஒரு வியாதியாய் உள்ள பிள்ளையை வைத்துக் கொண்டு ஒரு தாயானவள் தரையிலே நடந்துக் கொண்டிருக்க, ஒரு குடித்து வெறித்தப் புருஷன் வெளியே கொண்டாட்டத்திற்கு போகும் செயலைப் போன்ற காரியத்திற்கு நேர்மாறாக அது அமைந்திருந்தது. இந்த இரண்டுமே ஒத்த செயலே, இதைவிட அது மேல் என்று

சொல்ல முடியாது (It's just six of one, and half a dozen of the other).

30. அவர்கள் குடிக்க ஆரம்பித்து, அவர்கள் களிக்க ஆரம்பிப்பதை என்னால் காணமுடிகின்றது. அவர்கள் இசைக்குழு வோடு இசைந்திருப்பார்கள் என்று யூகிக் கிறேன், மேலும் அவர்கள் இசையைக் கொண்டவர்களாய் அந்த சிறிய வாலிப மானவர்கள் ஒருவரையொருவர் சுற்றிக் கொண்டு ஆடிக் கொண்டிருந்தனர் (swinging one another). அந்த சேவகர்கள் குடித்து வெறித்தும், பெண்களை பிடித்து இழுத்துக் கொண்டும், தங்கள் தலைக்கு மேல் அவர்களை சுற்றி வீசிக்கொண்டும், அவர்களை முத்தமிட்டுக் கொண்டும், நாற்காலியில் தங்கள் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டும், ஆரவாரகோஷம் எழுப்பிக் கொண்டும் இருந்தனர். தாங்கள்

பத்திரமாய் இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

31. ஓ, அமெரிக்காவே! அந்த குடித்து வெறித் தவர்களையும், அந்த ராக்-அண்டு-ரோல் களியாட்டத்தையும் நோக்கிப் பார்த்த அதே தேவன், இன்றிரவு உன்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

32. அவர்களுக்கு எப்பேர்ப்பட்டதான ஒரு நேரமாய் இருந்திருக்கும். என்னால் இப்பொழுது யூகிக்க முடிகிறது, அந்த பெல்ஷாத்சார் ராஜா ஒரு நவீன எல்விஸ் பிரஸ்லி-யாக (எல்விஸ் ஆரோன் பிரஸ்லி - ஒரு அமெரிக்க நடிகனும், பாடகனும், “ராக்&ரோல்-ன் மன்னன்" எனவும் அழைக்கப்படுபவன் ஆசி) இருந்திருப்பான். அவர்களுக்கு இருந்ததான விநோதமான கோமாளித்தனமான காரியங்களை அதிகமாய் செய்திருப்பான். இப்படியாய் எல்லாருமாக தொடர்ந்து செய்து கொண்

டிருந்தனர். ஆனால், மரணமானது வாசலில் படுத்துக் கொண்டிருப்பதை சற்றும் அறியாதவர்களாய் இருந்தனர்.

33. ஆக விருந்தும், களியாட்டமும் மும்முரமாய் போன போது, ஒரு பிரமாண் டமான நவீன ஹாலிவுட் அமைப்பின் ஒளிபரப்பில் உள்ள வழக்கமான காரியங் களைப் போன்று, அவர்கள் மதத்தைக் குறித்து, நல்ல விகடமாய்ப் (jokes) பேசலாம் என்று நினைத்தார்கள். ஆர்தர் காட்ஃப்ரே-வின் (Arthur Godfrey - தொலைக்காட்சி மற்றும் வானொலியில் புகழ்பெற்ற ‘நிகழ்ச்சி நடத்துபவர்' - ஆசி) தொகுப்புகள் அல்லது அது போன்ற தற்கால நவீன நிகழ்ச்சிகள் அல்லது எர்னி ஃபோர்ட்-ன் (Ernie Ford - ஒரு அமெரிக்க நடிகன், பாப் மற்றும் சுவிசேஷ பாடல் களை இயற்றியவன் - ஆசி) சில காரியங்கள், பிரசிங்கிமாரைக் குறித்து

விகடமாய் சொல்வது போன்ற காரியங் களை செய்ய விழைந்தனர். ஆனால், தேவன் இன்னமும் பரலோகத்திலிருந்து கீழே பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆனால், அவர்கள் ஒருவரும் தொடமுடியாத ஒரு தேசத்துக்குள் ஜீவித்துக் கொண்டிருக்கி றோம் என்று எண்ணினார்கள். ஆனால், எதை விதைக்கிறாயோ, அதையே அறுப் பாய். ஜனங்களே, அதைக்குறித்து சற்று எச்சரிக்கையாய் இருங்கள்.

34. நீங்கள் ஒரு தேசமாய் இருந்தாலும் சரி, ஒரு சபையாக இருந்தாலும் சரி அல்லது ஒரு தனிப்பட்ட நபராய் இருந்தாலும் சரி, நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய்.

35. அந்த ராஜா எழும்பி நின்று, “ஒரு நிமிடம்! பெண்களே, பிரசங்கிமார்களைப் பற்றின மத ரீதியான நகைச் சுவைகளைக் நாம் கேட்போம்” அல்லது அது போன்ற

ஒன்றை அவன் சொல்லுகிறதை என்னால் காண முடிகிறது. பறந்து கொண்டிருந்த ஜிகினா தொங்கல்களில், ஆர்வமாக அந்த வாலிப பெண்கள், "ஊஊப்ப்பி....! ஆம், நான் அவைகளை கேட்க விரும்பிகிறேன்" என்றார்கள்.

36. அந்த இளைமையான போர் சேவர்கலெல்லாம் இன்றைக்கு உள்ள வாலிப பையன்கள் போன்று நடந்து கொண்டார்கள். ஏனெனில், இது ஒரு நவீன பாபிலோனேயன்றி வேறொன்றுமில்லை. அந்நேரத்தில் தானியேல் பாபிலோனில் இருந்த அதே விதமாகத் தான், நானும் ஒரு அமெரிக்கனாக இருக்கிறேன். ஆனால், அது பாவத்தை மன்னிக்காது.

37. ஒரு முறை ஒரு பெண்ணிடம், “நீ கிறிஸ்தவளா?” என்று கேட்டேன். அவள், “நீர் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் சொல்லுகிறேன், நான் ஒரு அமெரிக்கன்”

என்று சொன்னாள்.நான், “அதில் எந்த காரியமும் இல்லை” என்றேன். எப்பொழுதுமே இல்லை.

38. நான் அமெரிக்கனாய் இருப்பதனால் சந்தோஷப் படுகிறேன், ஆனால், அதில் கிறிஸ்துவத்தை பிரதிபலிப்பதில் எந்த காரியமும் இல்லை, ஒரு காரியம் கூட இல்லை. நாம் பாவம் செய்வோமானால், அதற்குண்டான கிரயத்தை நாம் செலுத்தப் போகிறோம். இதுவே உங்களுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

39. அவர்களுக்கு அங்கே ஒரு தீக்கதரிசி இருந்தான், ஆனால், அவனுக்கு அவர்கள் செவிகொடுக்கவில்லை. அவர்கள் செய்தியை பெற்றிருந்தார்கள், ஆனால், அவர்கள் அதைக் குறித்து கேலி பரியாசம் செய்ய விரும்பினர்.

40. அது நவீன அமெரிக்காவாய் இல்லையென்றால், அது வேறு என்னவாக

இருக்கும் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் சுவிஷேசத்தையும், சத்தியத்தை யும் பெற்றிருந்தார்கள், ஆனால், அவர்கள் அதைக் குறித்து கேலி பரியாசம் செய்ய விரும்பினர்.

41. ஆகவே, அவர்கள், "நாம் கீழே போய் அந்த பரிசுத்த உருளைகளின் பாத்திரங்களை இங்கே மேலே கொண்டு வந்து, அவைகளைக் கொண்டு ஒரு நல்ல 'தமாஷ்' (வேடிக்கை) பண்ணுவோம்'' என்றார்கள்.

- தானி 5:2 42. தேவனுடைய பிள்ளைகளை பாவிகள் பரியாசம் செய்ய தேவன் அனுமதிக்கிறதில்லை . என்றாவது ஒரு நாள் நீங்கள் அதற்கு கிரயம் செலுத்துவீர்கள்.

43. அவர்கள் போய் கர்த்தருடைய பாத்திரங்களை எடுத்து, அவைகளை கோவிலுக்குள் கொண்டுவந்து, கர்த்த

ருடைய பாத்திரத்தில் மதுபானத்தை ஊற்றி குடிக்க விழைந்தார்கள். அவர்கள் அவர்க ளுடைய ஓர்டல்ஸ்-92 (Ortel's 92) மதுவையும் அல்லது ஃபேஸ்ட் புளூ ரிப்பன் (Pabst Blue Ribbon) மதுவையும், நல்ல வேடிக்கையாய் இருக்கும்படி அதற்குள் ஊற்றி, ஓ, அந்த கண்ணாடி களையும் பாத்திரங்களையும் நிரப்பி (tipped), பின்னர்அதைக் குடிக்க ஆரம் பித்து, குதூகலித்து, கர்த்தருடைய மார்க் கத்தை கேலி செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் செய்கிறது என்னவென்று அறியாதவர்களாயிருந்தனர்.

44. இன்றிரவு, இந்த தேசமும் அவ்வாறே இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் செய்தியையும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும், மறுபடியுமாய் பிறக்கும் அனுபவத்தையும் புறக்கணிப்பதை அறியாதிருக்கிறார்கள்.

45. அவர்கள் மத நம்பிக்கை உள்ளவர் களாய் இருந்ததாலும்.. இப்பொழுது அந்த ராக்&ரோல் களிப்பில் குடித்து வெறித் திருந்தாலும், அவர்கள் மத நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தார்கள். ஏனென் றால், வேதம், " அவர்களுடைய தேவர் களைப் புகழ்ந்தார்கள்” என்று கூறுகிறது.

- தானி 5:4

46. ஆகவே, நீங்கள் அதிக பக்தி உள்ளவர்களாய் இருந்து கொண்டும், இன்னமும் தவறாய் இருக்கலாம்! அது சரி. மன உத்தமம் ஒரு காரியமல்ல. "மனுஷ னுக்கு செம்மையாய் தோன்றுகின்ற வழி யுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.'' ஆகவே, அவர்களுக்கு ஒரு பெரிய மாகாண சபை இருந்தது, அவர்கள் சேவிக்க தக்கதான மதம் இருந்தது. அவர்கள் தேவனுடைய பரிசுத்த

காரியங்களைக் குறித்து பரியாசம் செய்தனர்.

-நீதி 16:25

47. அது சரியாக, தேவனுடைய பரிசுத்த காரியங்களைப் பரியாசம் செய்கின்ற இன்றைய வழக்கத்திற்கு ஒத்த தாய் இருக்கிறது. சுத்தமுள்ளதாய், மரியா தையாய், நேர்மையாய் ஜீவிக்க முயற் சிக்கிற ஜனங்களை அவர்கள், 'பழைய நாகரீகம்', 'பரிசுத்த உருளை' அல்லது வேறு ஏதோ அவதூறான பெயர்களை சொல்லி அவர்களை அழைக்கிறார்கள். தேவன் கிரியை நடப்பிக்கின்றதான அவருடைய வரங்களை அவர்கள், "ஒரு குறி சொல்லுதல் அல்லது அசுத்த ஆவியின் கிரியை அல்லது பிசாசு” என்று சொல்லுகிறார்கள். ஓ!.... உன்னால் எப்படி நியாயத்தீர்ப்பில் தப்பிக்க முடியும்? இரத்த சாட்சிகளின் இரத்தம் அதற்கெதிராய்

கூக்குரலிடுகிறது. தேவன் இந்த தேசத்தை அவர்களின் நவீனபாவங்களுக்காக நியாயந்தீர்க்கவில்லையென்றால், அவர் சோதோமையும் கொமாராவையும் எழுப்பி, அவர்களை அழித்ததற்க்காக அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டி யிருக்கும். அது உண்மை. நாம் நியா யத்தீர்ப்புக்கு உட்பட்டிருக்கிறோம்! நம்மு டைய ஆசீர்வதிக்கப்பட்டதான இரட்சகர் செய்கிறதாக நீங்கள் காண்கிற இந்த மகத்தான அற்புதங்கள், நியாயத்தீர்ப்பு சமீபமாய் இருக்கிறதென்பதற்கு எச்சரிப் பின் அடையாளமாய் இருக்கின்றன. அவைகள் இந்த தேசத்தின் இந்த பக்கத் திலிருந்து, அந்த பக்கத்திற்கும், கிழக்கி லிருந்து மேற்குக்கும், வடக்கிலிருந்து தெற் குக்குமாக ஊடுருவியுள்ளது (combed). அவர்கள் அதை வேண்டாமென்று தள்ளி, அதை பரிகசித்து, அவர்களுடைய ஏடு களில் 'அர்த்தமற்றது' என்று எழுதினார்கள்.

நவீன பாபிலோனே! அதைக் குறித்து சற்று சிந்தித்துப் பார்.

48. குடித்துக் கொண்டும், குவளைகளை நிறைத்துக் கொண்டும் அவர்கள் இருக்கும் போது, சடுதியில், இந்த பெரிய சினிமா ப்ளேபாய், (playboy) பெல்ஷாத்சார் என்று அழைக்கப்படுபவன், அவனுடைய கோப்பையிலிருந்து குடிக்க ஆயத்தமாய் இருந்த போது, அவன் திரும்பி அரண்மனை பக்கமாக நோக்கி பார்த்த போது, அவனுடைய கண்கள் பிதுங்கி வெளியே வருவதைப் போலிருந்தது. ஏனென்றால், பரலோகத்திலிருந்து ஒரு மனிதனின் கரம் போன்று ஒன்று வருகிறதையும், அது சுவற்றின் மீது மேலும் கீழுமாக எழுத ஆரம்பித்ததையும் கண்டான்.

49. நீங்கள் இதை கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன், அது ஒரு

பூசப்பட்ட சுவற்றின் மீது எழுதினது. ஒருக்கால், அந்த நவீன ராக்&ரோல் நடந்து கொண்டிருந்த இடத்தில், தொங்கல்களின் ஊடாக மெழுகிவர்த்தி விளக்குகளின் வெளிச்சமானது அந்த சுவற்றின் மேல் பிரகாசித்துக் கொண்டிருந்திருக்கும். தேவன் காரியங்களை ஏதோ ஒரு மூலை யில் செய்கிறவர் அல்ல. அது நேராக, வெளிச்சத்திற்கு கீழாக, அங்கே தான் தேவன் பேசவும் அசையவும் செய்கிறார். ஆகவே, அவருடைய இயற்கைக்கு மேம் பட்ட கையெழுத்து, அந்த பூசப்பட்ட சுவற்றின் மேலே, அவர்கள் யாவரின் முன்னிலையிலும் எழுதப்பட்டது.

50. அந்த நவீன விகடகவி, நல்ல வானொலி நகைச் சுவையாளர், தொலைக் காட்சி நடிகனான அந்த ராஜாதான் முதலா வதாக அதை பார்த்திருக்க வேண்டும். குடிப்பதற்கு அவனுடைய பாத்திரங்கள் நிரப்பப்பட்டு, அதை அவன் கைகளில்

வைத்துள்ளவனாய், அவன் கண்கள் பிதுங்கிவர எல்லாம் ஆடுவது போல் உணர்ந்தான். அவன் அப்படி செய்தான் என நான் யூகிக்கிறேன். "அவனுடைய எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது" என்று வேதம் கூறினது. அவன் நிச்சயமாக பதறிப் போய் ஆட்டங்கண்டிருப்பான். தேவன் தம்முடைய அடையாளங்களை காண்பிக்க துவங்கினால், உங்களை அசைக்க கூடிய நேரம் அதுவே. அவன் அதை கவனித்த மாத்திரத்தில், அவனுடைய ராக்&ரோல் பாடல்கள் அவனை அதிர்ச்சிக்குள்ளாக் கியது.

51. பின்னர் அவன் அந்த சுவற்றின் மீதுள்ள கையெழுத்தைக் கவனித்தப் போது, நான் யூகிக்கிறேன், அதாவது, உதட்டுச் சாயம் பூசிக் கொண்டு, அதைப் போன்று.... எனக்கு அதைச் சொல்லத் தெரியவில்லை, தலைமயிர் முற்றிலும் தொங்கிக் கொண்டும், சுருள் சுருளாக

சுற்றிலும் அசைந்துகொண்டும், இந்த விதமாக இருந்த அந்த இளம்பெண், குடித்து வெறித்திருந்த அந்த போர் சேவகர் களிடம், தொண்டை விக்கினவளாய் (hiccuped) "இன்றிரவு, இந்த பையனுக்கு (ராஜா) என்னவாயிற்று என்று வியக்கி றேன்!" என்று சொன்னாள்.

52. யாரோ ஒரு வாலிபன் அவளை பிடித்து இழுத்து, “அது இருக்கட்டும், அடுத்ததாக நாம் இருவரும் நடனமாடு வோம்” என்றான். இன்னிசை நின்று போயிற்று.

53. ஓ... பாவம் நிறைந்த இந்த பெரிய தேசமே, ஒரு நாள் உன்னுடைய ராக்&ரோல் நிறுத்தப்படப் போகின்றது. ஒரு பிரசங்கியாரின் சத்தத்தை நீ கவனியாமல் போவாயானால், என்றோ ஒரு நாள் நியாயத்தீர்ப்பில் தேவனுடைய கரத்தை நீ கவனிக்க வேண்டியிருக்கும்.

ராக்&ரோல் இசைகள் நிறுத்தப்பட்டு, அந்தடைட்டானிக் கப்பலின் வாத்தியக் குழுவினர் செய்தது போன்று, தங்கள் இசையை மாற்றி, “உம் அண்டை தேவனே, நான் சேரட்டும்!" என்ற பாடலை இறுதியாக அவர்கள் இசைத்தது போன்று நடக்கும். என்றாவது ஒரு நாள் நீ அந்த இசையை மாற்றத்தான் போகிறாய்.

54. இன்னிசை நிறுத்தப்பட்டது. அவர் கள், அவர்களுடைய நகைச்சுவையாளர் களையும், தொலைக்காட்சி நிகழ்ச்சி நட்சத்திரங்களையும் கவனித்தார்கள். ஆனால், அங்கே அவன் நின்று கொண்டு, அந்த மகத்தான காரியம் நடைபெறுவதைக் காண்கையில், அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கிற தைக் அவர்கள் கவனித்தார்கள். அவன், "ஏன்? சுற்றியுள்ள எல்லா மதில்களும் அடைக்கப் பட்டிருக்கின்றதே. நான் தெரிந்தெடுத்த என்னுடைய காவற்காரர்கள்

வாசலைக் காத்துக் கொண்டிருக்கின்றனரே” என்றான்.

55. ஆனால் பாருங்கள், நீங்கள் நினைக்கின்ற படி கதவு வழியாய் தேவன் உள்ளே வர வேண்டிய அவசியமில்லை. அவர் மகிமையிலிருந்து கீழே இறங்கி வருகிறார்! அவருடைய கரம் இந்த சுவற்றின் மீது எழுதிக் கொண்டிருந்தது.

56. மிக நவீனமான ஒரு ஸ்தலத்தில் இருந்ததால், வேதம் சொல்லுகிறது, துரிதமாக அவன் தன்னுடைய எல்லா குறி சொல்லுகிறவர்களையும், ஜோசியர்களை யும், எல்லா பேராயர்களையும், பட்டதாரி கள் மற்றும் போப்புகள், கார்டினல் இப்படியாக யாவரையும் அழைப்பித்தான். அவன், ''பண்புள்ள மனிதர்களே!, இப்பொ ழுது நான் உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் உபதேசிக்கவும், நீங்கள் செய்ய விரும்பின காரியங்கள் யாவையும்

செய்யவும்படியாய் உங்களுக்கு நான் சிலாக்கியம் கொடுத்தேன். இப்பொழுது, இந்த சுவற்றின் மீது எழுதப்பட்டவைகளை எனக்காக வியாக்கியானம் செய்து கொடுங்கள்'' என்று சொன்னான்.

57. சரியாக அன்றைக்கு உள்ளது போன்றே இன்றைக்கும் உள்ளது. இயற்கைக்கு மேம்பட்டதில் அவர்களுக்கு பழக்கமில்லை. அதைக் குறித்து அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அறியாத பாஷையை எப்படி வியாக்கியானிப்பது என்பது அவர்களுக்கு தெரியாத காரியமாய் இருந்தது. பரலோக பாஷையைக் குறித்து அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் வாயடைத்துப் போனவர்களாய் காணப்பட்டனர். அதைக் குறித்து அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் வெறுமனே நின்று கொண்டிருந்த நிலையில்...

58. நினைவிருக்கட்டும், இது புறஜாதி ராஜ்ஜியத்தை உள்ளே கொண்டு வருகிற தாயிருக்கிறது. அது இயற்கைக்கு மேம் பட்ட காரியத்தின் கீழே நுழைந்தது போன்று, இயற்கைக்கு மேம்பட்ட காரி யத்தின் கீழே அது வெளியேறும்.

59. ஆனால், இந்த பேராயர்களும், கார்டினல்களும், பெரிய பட்டதாரிகளும், இந்த இயற்கைக்கு மேம்பட்டதை வியாக்கி யானிக்கக் கூடாமல் போயிற்று. அதைக் குறித்து அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. அவர்களுடைய இலக்கிய கலைப் புத்த கங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து போது, அதற்கு ஒப்பனையாக ஒன்றையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பாருங்கள், ஆவிக்குரிய காரியங்களை ஆவிக்குரிய பிரகாரமாய் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் யாவருக்கும் கலக்கம் உண்டாகியது, அவர்

களுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை .

60. முடிவிலே, ஒரு சிறு ராணி, நினைவிருக்கட்டும், அவள் அந்த ராக்&ரோல் விருந்தில் இல்லை. ஏதோ ஒரு காரியம் சம்பவித்துக் கொண்டிருக்கிறது என்று அவள் அறிந்திருக்க உண்டான ஒரே வழி, ராஜா அப்படியே வெலவெலத்துப் போய், களியாட்ட விருந்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டது என்று அவளுக்கு செய்தி வந்ததன் மூலமே. அவள் நல்ல விசுவாசிகளில் ஒருவராய் இருந்திருக்க லாம். எப்படியாயிருந்தாலும், மறக்கப் படாத ஒருவளாய் அவள் அங்கே இருந்தாள்.

61. அவள் விருந்து சாலைக்குள் நுழைந்தாள். அந்த நவீன விகடகவி மற்றும் அந்த இசைக்குழு முழுதும் செய லற்றுப் போய் நிற்பதைக் கண்டவளாய்

அவள், "ஓ ராஜாவே! நீர் என்றென் றைக்குமாய் வாழ்க" என்று சொன்னாள். ஆனால் சரியாக அங்கே அவன் மரித்தவனாய் காணப்பட்டான் என்பதை அவன் அறியாதிருந்தான். அவளோ, "என்றென்றைக்குமாய் வாழ்க!'' என்றாள். மேலும் அவள், "அந்த சுவற்றின் மீது எழுதப்பட்ட கையெழுத்தைக் குறித்து நீர் கலங்கிப் போயிருக்கிறீர் என்று நானறி வேன். பேராயர்களும், போப்புகளும், கார்டினல்களும், வேதாகமக் கல்லூரியில் டாக்டர் பட்டம் (doctors of divinity) பெற்றவர்களும், வேரொறுவரும் அதை படிக்கமுடியவில்லை என்பதை நான் அறிவேன். ஆனாலும் ராஜாவே, நான் ஒரு காரியத்தை உமக்கு சொல்கிறேன். இயற் கைக்கு மேம்பட்டதை குறித்து அறிந்த ஒரு மனிதன் உம்முடைய ராஜ்ஜியத்தில் இருக் கிறான்” என்று சொன்னாள்.

62. ஓ, சகோதரனே! நாம் சுவற்றின் மீது உள்ள கையெழுத்தை பார்க்கும் பொழுது, இன்றைக்கு, அதைக் குறித்து அறிந்த ஒரு மனிதன் இருக்கிறார். இந்த பட்டணத்தி லுள்ள எல்லா மருத்துவர்களிடத்திற்கும் நீங்கள் போயிருக்கலாம். ''நீ மரிக்கத் தான் வேண்டும்'' என்று அவர்கள் சொல்லி யிருக்கலாம். ஆனால், அங்கே ஒரு மனிதன் இருக்கிறார்! கறைபடிந்த நரகத்தின் சுவர்களைப் போன்று, உன் ஆத்துமா கருத்துப் போகும் அளவிற்கு நீ பாவத்திற்குள் நடந்து போயிருக்கலாம். நம்பிக்கையற்ற நிலைமையில் தற்கொலை செய்து கொள்ள நீ ஆயத்தமாயிருக்கலாம். ஆனால், அங்கே ஒரு மனிதன் இருக்கி றார். அவர் பெயர் இயேசு. இயற்கைக்கு மேம்பட்டதை அவர் அறிவார். அவர் நம்முடைய ராஜ்ஜியத்தில் இருக்கிறார். ஏனென்றால், நாம் அவருடைய ராஜ்ஜியத்

தின் பிள்ளைகளாய் இருக்கிறோம். அங்கே ஒரு மனிதன் இருக்கிறார்!

63. அவள், “இயற்கைக்கு மேம்பட்டதை அவர் அறிவார். சில வருடங்களுக்கு முன்னர் அவனுக்குள் தேவனுடைய ஆவி இருக்கிறதென்று கண்டறிந்தார்கள். மிகவும் அருமையான ஆவியை அவன் உடையவனாயிருந்தான். அவனால் சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்ல முடியும். தரிசனங்களைக் அவன் கண்டான், அவைகள் ஒவ்வொன்றும் மிகச் சரியாக அப்படியே இருந்தது. ஆகவே, நீர் கலங்கவேண்டாம். எனக்கு சற்று நேரம் கொடுப்பீரானால், நான் அவனை இங்கே அழைத்து வருவேன்” என்றாள்.

64. நீ அவரை அழைக்கும் ஒரு நாள் வரும். ஒருக்கால் உன்னுடைய வீட்டில் நீ அவருக்கு இடம் கொடுக்க முடியாமல் இருக்கலாம். தொலைக்காட்சி பார்ப்பதி

லும், பீர் அருந்துவதிலும், சீட்டு விளையாடுவதிலும், ராக்&ரோல் விடுதிக்குப் போவதிலும் நீ அதிக மும்முரமாய் இருக்கலாம். ஆனாலும், நீ அவரை கூப்பிடக்கூடிய நேரம் ஒன்று உண்டு! அது சரியே.

65. ஆகவே, தானியேல் உள்ளே கொண்டு வரப்பட்டான். அவன் உள்ளே கொண்டு வரப்படும் போது... நீதியைப் பிரசிங்கிக்கிற ஒருவன், ஒரு தேவனுடைய மனிதன்! அப்பேர்ப்பட்டதான ஒரு இடத்தில், ஒரு தேவனுடைய மனிதன் ஜீவிப்பதைப் பற்றி என்னால் யூகித்துக் கூட பார்க்க முடியவில்லை, அதற்கெதிராக அவன் வெளியே அழைக்கப்படாதவரை. ஆனால், பாருங்கள், அந்த ராஜா அதற்கு எந்த கவனமும் செலுத்தவில்லை. அவன் அந்த நிலைமைக்குள்ளாக இப்போது இருப்பதன் காரணம் அது தான்.

66. அவர்கள் தானியேலைக் கொண்டு வந்தனர். அவன், ''ஏன் உன்னுடைய போப்புகளும், பட்டதாரிகளும் உனக்கு வியாக்கியானம் அளிக்க இயலவில்லை?" என்றான். அதை வியாக்கியானிக்க அவர்களிடத்தில் ஒன்றுமே இல்லை.

67. அதன் பின்னர் என்ன சம்பவித்தது? தானியேல், "ஓ.... பெல்ஷாத்சாரே, இந்த காரியங்களெல்லாம் உமக்கு தெரியும். இவைகள் உமக்கு மறைக்கப்படவில்லையே" என்று சொன்னான்.

68. நான் அமெரிக்காவுக்கு கூறுகிறேன்! இந்த நிமிஷம் அவர்களை என்னுடைய சத்தத்திற்கு செவிகொடுக்க செய்வேனேயானால் நலமாயிருக்கும் என வாஞ்சிக்கிறேன். இந்த காரியங்களெல்லாம் நீங்கள் அறியாதவைகளல்லவே. தேசங்கள், நாம் செய்தவாறே, முன்பு பாவம் செய்துது. நாம் தராசிலே

நிறுக்கப்பட்டு குறைய காணப்பட்டோம். பிரான்சுக்கு என்ன நேர்ந்தது? ஜெர்மனிக்கு என்ன நேர்ந்தது? மதுபானம், பெண்கள், பெரிய கொண்டாட்டம் (big time) என்பவைகள் பின்னே சென்ற மற்ற தேசங்களுக்கு என்ன நேர்ந்தது? அது எப்பொழுதும் அவ்விதமாகவே வருகிறது. நாமும் நியாயத்தீர்ப்புக்கு தவிர்க்கப்பட்ட வர்கள் அல்லவே. தேவன் நீதியுள்ளவர்.

69. அவன், “உம்முடைய தகப்பனார், எப்படி தேவன் மகாப் பெரிய தேசத்தை அவருக்கு கொடுத்தார்? ஆனால் அதை எல்லாம் அவர் மறந்து போனார். நீர் செய்து கொண்டிருக்கிற அதே காரியங் களை அவரும் செய்தார். தேவன் அவரை ஒரு காட்டு மிருத்தைப் போல மாற்றினார். இந்த காரியங்களை எல்லாம் நீர் அறிந்திருந்தும், பரிசுத்த பாத்திரங்களை நீர் எடுத்து அவைகளை பரியாசம் செய்தீர்”

என்றான். கவனியுங்கள், மேலும் அவன், “இந்த கையெழுத்து சுவற்றின் மீது எழுதப்பட்டாயிற்று. உன்னுடைய ராஜ்ஜியம் மட்டிட்டது (numbered).'' வேறு வார்த்தையில் சொன்னால், “இங்கே பாரடா, உன்னுடைய நாட்கள் எண்ணப் பட்டாயிற்று, உன்னுடைய ராஜ்யபார மானது எடுக்கப்பட்டு, கொடுமை மிக்க (brutal), அவ்வளவு தேவனற்ற இன்னொரு தேசத்திற்கு கொடுக்கப்பட்டாயிற்று." அவர்களைப் போல மோசமான தேசம். தேவன், பாவத்தை பாவத்தோடு யுத்தம் பண்ணும்படி செய்கிறார். இன்றைக்கு நான் ஆச்சரியப்படுகிறேன்!

70. சரியாக அதே நேரத்தில், நான் முதலாவதாக இதைச் சொல்லட்டும். அவன் அங்கே நின்று கொண்டு, அந்த சுவற்றின் மேல் எழுதப்பட்டதைக் கவனித்துக் கொண்டிருக்கும் போது,

அப்பொழுதே, அங்கே கதவுக்கடியில், வாயில் காப்போன்கள் கொலை செய்யப் பட்டாயிற்று என்பதை சிறிதும் அறியாதவ னாயிருந்தான். போர் வீரர்கள் வீதியில் இருந்துகொண்டு, அரண்மனை காவற்காரர் களைக் கொன்று கொண்டிருந்தார்கள். அவர்கள் படிகளில் வந்து கொண்டிருந் தனர். தங்கள் பிள்ளைகளையும், புருஷன் மார்களையும் விட்டு விட்டு வந்திருந்த அந்த ஸ்திரீகள் அங்கே நின்று கொண் டிருந்தனர், மனைவிகளைவிட்டு விட்டு வந்திருந்த ஆண்கள், குடித்து வெறித்து, ஏதோ நவீன நடனத்தைப் பார்த்துக் கொண்டு நேரத்தைக் கடத்திக் கொண் டிருந்தனர். போர்சேவகர்கள் ஏற்கனவே படிகளிலே வழியில் வந்து கொண்டிருந் தனர்; இன்னும் சில நிமிடங்களுக்குள் ராஜா சங்கரிக்கப்பட போகிறார். அங்கே குடித்து வெறித்திருந்த ஆண்கள் கூட்டம் அனைத்தும், தேவ நம்பிக்கையற்ற, பிசாசு

பிடித்த தேசத்தாரால் சங்காரம் பண்ணப் படப் போகிறார்கள். பெண்களோ நிர்வா ணமாக்கப்பட்டு, வாலிபப் பெண்கள் வீதிகளிலே அவமானப்படுத்தப்பட்டு, பின்னர் கால்களைப்பிடித்து தூக்கி, தலையிலே சுவற்றிலே மோதி அடிக்கப் படுவார்கள். புத்தி பிசகான, குடித்து வெறித்த போர்ச் சேவகர்கள் தங்கள் காமவெறியை அவர்களோடு தீர்த்தபின்பு, அவர்களை வெட்டி போடுவார்கள். இவையெல்லாம் அங்கே கதவண்டை நடந்து கொண்டிருந்தது, ஏனென்றால் அவர்கள் தராசிலே நிறுக்கப்பட்டு குறைய காணப்பட்டார்கள்.

71. நான் ஆச்சரியப்படுகிறேன், இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறதான நம்முடைய நவீனங்கள், தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளை கேலி செய்து, சிரித்து, ஜீவிக்கிற தேவனுடைய சபையைப் பார்த்து கேலி செய்து, சிரித்து,

“இறுமாப்புள்ளவர்களாயும் தேவ பக்தி யின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்'' என்று வேதம் கூறுவது போல் செய் கின்றனர்.

72. நாம் மிகவும் பத்திரமாக இருக்கி றோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற இந்த நாளிலே, ரஷ்யா நம்மைவிட விஞ்ஞானத்திலே ஐந்து வருடம் முன்ன தாக இருக்கிறதென்று சடுதியாய் கண்டுள் ளது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

73. நாம் அநேக விருந்துகளில் இருந் துள்ளோம். நாம் அதிகமாய் பாவத்திற்குள் பலவந்தமாய் போயுள்ளோம். சபையானது அவ்வளவு உறக்கத்தில் இருக்கிறது, இனி அது ஜெபக் கூட்டங்களைக் குறித்து கவலைப்படுவதில்லை. அவர்கள் அக்கறை அற்றவர்களாய் இருக்கிறார்கள். ஜீவிக்கிற தேவனுடைய உண்மையான

ஆவிக்கு எதிராக ஒரு சத்தத்தை அவர்கள் எழுப்புகிறார்கள். அவர்கள் அதைப் பெறப் போவதில்லை .

அவர்கள் அவ்வளவாக தங்களை ஸ்தாபனமாக்கி, தங்களை அலங்கரித்துக் கொள்ளுகிறார்கள். ஜெபக் கூட்டங்களுக்கு வருவதற்கு அவர்களுக்கு நேரம் கிடை யாது. அவர்கள் தொலைக் காட்சிகளிலும், சினிமா கொட்டகையிலும், ஊரைச் சுற்றிக் கொண்டும், மதுபான விருந்துகளுக்கும், மற்ற காரியங்களுக்கும் போகின்றனர். அது உண்மை .

74. ஒருக்கால் அது பண்டைய நாகரீகத்தைப் போலத் தோற்றமளிக்கலாம், ஆனால் இன்றைக்கு தேசத்துக்கு அதுவே தேவையாயிருக்கின்றது. ரப்பர் கையுறை கள் அணிந்து கொள்ளுதல்-அது போல சுவிஷேசத்தை சுற்றி மிக அதிக மிருதுத் தன்மை (sissying around) காணப்படுகிறது.

பரிசுத்த ஆவியினால், வெறும் கரங்களால் அது கையாளப்பட வேண்டியுள்ளது. உண்மையாக!

75. ஓரிரு வாரங்களுக்கு முன்னர், பில்லி கிரஹாம் தன்னுடைய செய்தியில், "ரஷ்யா வாஞ்சிக்கும் எந்த நேரத்திலும், இந்த தேசமானது ரஷ்யாவுக்கு ஒரு ஒளிபரப்பும் சாதனமாக செயற்கைக் கோளாக (satellite) முடியும்" என்று சொன்னார். நாம் எங்கே இருக்கிறோம்?

76. நீங்கள் எல்விஸ் பிரெஸ்லியின் ரெக்கார்டுகளை வாங்கிக் கொண்டு, இந்நாட்களில் ஒன்றில், -'நாம் சுசியை நேசிக்கிறோம்'- என்ற அவனுடைய பாடல் இசையை கேட்பதற்காக, சபைக்கு போகாமல் வீட்டிலே தரித்திருப்பீர்கள்.!! நீங்கள் தராசிலே நிறுக்கப்பட்டு குறைய காணப்பட்டீர்கள். என்ன சம்பவித்தது?

அங்கே சுவற்றின் மீது ஒரு கையெழுத்து இருக்கின்றது.!

77. ரஷ்யர்கள் ஒரு 'ஸ்புட்னிக்' என்ற செயற்கைக்கோளை, பூமியிலிருந்து ஐநூறு மைல்களுக்கும் அப்பால் ஏவியுள்ளார்கள். அதின் எந்த ஒரு கருவியையும் நம்மால் கட்டுப்படுத்த இயலாது. அடுத்த முப்பது நிமிடங்களில் அதைப் போன்று ஆறு‘ஸ்புட்னிக்'களை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மீது பறக்க விட்டு, "சரணாகதி அடையுங்கள், அல்லது சில வினாடிகளில் சாம்பலாகி விடுவீர்கள்'' என்று சொல்லக் கூடும். அவர்களால் அதைச் செய்ய முடியும். அதைச் செய்ய முடியாமல் தடை செய்ய நம்மால் கூடாது. ஒரு இரத்த மில்லாத, இருதயமற்ற, தேவபக்தியற்ற கம்யூனிஸ்ட்கள் கரத்தில் அது இருக்கிறது. அதைத் தான் தேவன், பாவத்தை வெளிச்சத்திற்கு வருவதற்காக உபயோகிக் கிறார், நிச்சயமாக நீங்கள் வேதத்தை

வாசிப்பீர்களானால், வெளிப்படுத்தின விசேஷத்தின்படியாய் ரஷ்யா அதை செய்ய வேண்டி உள்ளது. சரி, தீர்க்கதரிசன போதகர்களே ஒருக்கால் நீங்கள் கருத்து வித்தியாசப் படலாம். ஆனால், இவை களெல்லாம் முடியுமட்டாய் காத்திருங்கள். அந்த நோக்கத்திற்காகத்தான் ரஷ்யா வைக் கப்பட்டுள்ளது. வேதம் அவ்விதமாய் கூறினது.

78. இப்பொழுது இங்கே அவள் ஒரு 'ஸ்புட்னிக்'கோடு நிற்கிறாள். அன்றொரு நாள் நாம் அதைப் போன்ற ஒன்றை அனுப்ப முயற்சித்தோம். அவர்கள் செய்த அளவிற்கே நம்மால் முடியும் என்று நாம் எண்ணினோம். பூமியை விட்டு மூன்ற டிகள் மேலெழும்பி, பின்னர் சிதைந்து விட்டது. அதிகப் படியான ராக்&ரோல் களும், பாவங்களும். நாம் தராசிலே நிறுக்கப்பட்டு குறைய காணப்படுகிறோம். தேவனே! இரக்கமாயிரும்.

79. நாம் என்ன செய்யப் போகிறோம்? அவர்கள் இந்த 'ஸ்புட்னிக்'குள் ஏவுகணை களை வைத்தனுப்பி, "சரணாகதி அடை யுங்கள், அல்லது ஐந்து நிமிடங்களுக்குள் ஒரு குவியலாக தூசியாகி விடுவீர்கள்" என்று சொன்னால் என்ன சம்பவிக்கும்? நிச்சயமாக, நமது அரசாங்கம் உயிர் மீட்சிக்காக அடிபணியலாம். அவர்களால் செய்ய முடிகிற காரியம் அது மட்டுமே.

80. அப்பொழுது அமெரிக்கராகிய உங்களில் சிலருக்கு என்ன சம்பவிக்கும்? இங்கிருக்கிற நாம் அனைவரும். இவ் விடத்திலுள்ளவர்களல்ல, ஆனால் நான் தேசியமாகப் பேசுகிறேனா? தேசியமாகப் பேசுகிறேன்.

81. ரோஜா மொட்டு போன்று உதட்டில் சாயம் பூசிக் கொண்டு சமர்த்தாக செல்லும் பெண்களே! மூலையில் நின்றுகொண்டு, சுவிஷேசத்தைப் பிரசிங்கிக்கிறவர்களைப்

பார்த்து கேலியாக சிரிக்கின்றீர்கள். இருபது வயதுக்குட்பட்ட இளமையானவர்களே! அடக்கி ஆள உண்டாயிருக்கின்ற அறிவைக் காட்டிலும் உங்களிடம் அதிக துணிவு இருக்கிறதென்று நினைக்கிறீர்கள்.

82. வீட்டில் தாயாரோடு உட்கார்ந்து கொண்டு தொலைகாட்சியை பார்த்துக் கொண்டிருக்கிற தகப்பனே! உனக்கு என்ன சம்பவிக்க போகின்றது? உன்னுடைய மகன் வேறே எங்கோ தேவையில்லாத இடத்தில் இருக்கிறான். சகோதரி எங்கேயோ உணவகத்தில் இருந்து கொண்டு ராக்&ரோல் ஆடிக் கொண் டிருக்கிறாள். நீயோ தொலைகாட்சியை பார்த்துக்கொண்டு சுவிசேஷத்தை பரியாசம் செய்து கொண்டிருக்கிறாய்.

83. சபை அங்கதினனே! உனக்கு என்ன சம்பவிக்க போகின்றது? உங்களுக்கு உண்டாகும் விளைவு என்னவாக இருக்க

போகின்றது. எல்லா புத்தகத்திலும் அல்லது பட்டணத்திலுள்ள மிக பெரிதான சபையிலும் உன் பெயர் இருக்கலாம். ஆனால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் பாதுகாப்பின் கீழ் நீ இல்லையென்றால், அழிந்து போகிறவர்களோடே நீங்களும் அழிந்து போவீர்கள், அங்கே உங்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை.

84. என்ன சம்பவிக்க போகின்றது? அங்கு மேலாக ஒரு 'ஸ்புட்னிக்' விடப்பட்டிருக்கிறது. என்ன சம்பவிக்கும்? தேசம் சரணாகதி அடையும் நிச்சயமாக. அரசாங்கம் செய்ய கூடிய மரியாதையான ஒரே காரியம் அது ஒன்று தான்.

85. அப்பொழுது என்ன சம்பவிக்கும்? அலை அலையாய், கப்பல் கப்பலாய் போர் சேவகர்கள் வருவார்கள். அலை அலையாய் விமானங்கள் வந்து இந்த

தேசத்தில் இறங்கும். பெண்கள் வீதிகளில் அவமானப்படுத்தப்படுவார்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்? அது அவர்களுக்கு சொந்தமானது. உங்களை வீடுகளிலிருந்து உதைத்து தள்ளி, அதை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

86. வாலிப பெண்களே! வாலிப ஆண்களே! அந்த நேரத்தில் இருக்கப் போகும் உங்களுக்கு என்ன சம்பவிக்கும்? பாவத்தின் கிரயம் செலுத்தப்பட்டாக வேண்டும். அது எந்த தேசமாயினும் கவலையில்லை அல்லது யாராயிருந்தா லும் சரி, அது அதை செய்யத் தான் போகிறது. தனிபட்ட முறையில் அல்லது ஒரு தேசமாக. அதற்கான கிரயத்தை செலுத்த தான் வேண்டும். காட்டு மிராண்டிதனமான, தேவ பக்தியற்ற, கிர்தா (whisker-jawed) வைத்த, கம்யுனிஸ்டு போர் சேவகர்கள் உங்கள் மனைவிகளை

யும், உங்கள் வாலிப பெண்களையும் பிடித்து அவமானப்படுத்துவார்கள். அங்கே நின்று கொண்டு, நீங்கள் பார்க்கத்தான் முடியும். அதை குறித்து நீ ஒன்றும் செய்ய முடியாது.

87. இதற்கு காரணம் என்ன? நீங்கள் அப்படிப்பட்ட காரியங்களான தொலைக் காட்சி, ராக்&ரோல், பாவம் முதலான வைகள், ஏதோ குளிர்ந்துப் போன, இயற்கைக்கு மேம்பட்டதை வியாக்கியா னிக்க முடியாத, சாதாரண பிரசங்கியார் சொல்லுகின்றவைகளுக்கு செவி கொடுத் ததினால் தான். கையெழுத்தானது சுவற் றின் மேல் உள்ளது! அது சரியே! நாம் தராசிலே நிறுக்கப்பட்டு குறைய காணப் பட்டோம்.

88. அது எப்பொழுது சம்பவிக்கும்? காலையில் பொழுது விடிவதற்கு முன்னர். யார் அதை தடை செய்ய முடியும்?

முயற்சி செய்து பார். அப்படியாய் சம்பவிக்கும் என்று வேதம் சொல்லுகிறது.

89. ஆனால், நான் உங்களுக்கு சொல்லட்டும், ஜீவிக்கின்ற தேவனுடைய சபையை அது ஒரு போதும் தொடாது, அந்நேரத்தில் நாம் போய் விட்டிருப்போம்.

90. ஆகவே, நண்பர்களே! செவி கொடுங்கள். சுவற்றின் மீது நாம் கையெ ழுத்தை பார்க்கிறோம், அந்த காரியமானது அவ்வளவு நெருக்கத்தில் இருக்குமானால், இது சம்பவியாதபடி இப்பொழுது அதைத் தடை செய்ய ஒன்றினாலும் கூடாது.

91. அமெரிக்காவுக்கு பிரசங்கம் பண்ணப்பட்டாயிற்று, இயற்கைக்கு மேம் பட்டது செய்யப்பட்டாயிற்று, தொடர்ந்து அவர்கள் அதின் மேன்மையான காரியத் தினூடாக கடந்து வந்தார்கள்.

92. ஒரு நாட்டிற்குப் போய் ஒரு எழுப்புதல் நடத்தி, வாரத்திற்கு 40 பேர் மனமாறினால், 6 வாரங்கள் கழித்து அங்கே போனால் 4 பேர் கூட அங்கு இல்லை. அந்த பழைய குளமானது வலை போட்டு எல்லாம் எடுக்கப்பட்டாயிற்று. தேவன் அனேகம் பேரை தெரிந்தெடுத்தார், கடைசி நபர் உள்ளே வந்தவுடன் கதவு மூடப்பட்டு, அது முடிந்து விடும்.

93. இரக்கத்தை வேண்டாம் என்று தள்ளின பின்பு, அங்கே நியாயத்தீர்ப்பை தவிர வேறொன்றும் இல்லை. இதோ, நாம் இங்கே பாதையின் முடிவில் இருக்கி றோம். இயற்கைக்கு மேம்பட்டது செய்யப் பட்டாயிற்று, அது பரிகாசம் செய்யப்பட்டு நகைப்பிற்குள்ளாக்கப்பட்டது. கடைசி காரியமானது, தேவன் தம்முடைய சொந்த வல்லமையிலும், அவருடைய சொந்த நேச குமாரனிலும் வந்து, அவருடைய சபை யின் மூலமாக கிரியை செய்தார். அவர்

களோ அதை, 'ஆன்மீகவாதம்' அல்லது 'பிசாசு' என்று சொல்லுகிறார்கள். நியாயத் தீர்ப்பை தவிர வேறு என்ன இன்னும் விடப்பட்டிருக்கிறது? ஓ, இங்கே, சுவற் றின் மேல் எழுதப்பட்ட கையெழுத்து இருக்கிறது.

94. ஆனால், அது அவ்வளவு நெருக் கத்தில் இருக்குமானால், எந்த ஒரு போதக ருக்கும் தெரியும், உபத்திரவ காலத்திற்கு முன்னர் சபையானது எடுத்துக்கொள்ளப் படுதலில் போகும் என்று. ஆக அவ்வளவு நெருக்கமாயிருக்குமானால், பொழுது விடிவதற்குள் சம்பவிக்க கூடுமானால், எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்து என்ன? அதை காட்டிலும் இது மிக நெருக்கமாக இருக்கிறது. ஓ, கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக! கர்த்தரு டைய வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. கையெழுத்து எழுதப்பட்டாயிற்று, வேதத் தில் எழுதப்பட்டுள்ளது, அதை காணும்

படியாக நாமும் ஜீவித்து கொண்டிருக் கிறோம்.

95. என்னுடைய சத்தத்தின் தூண்டுதலி னாலே நீங்கள் இந்த மணி வேளையில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வீர் களா? பேதுரு, “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்க ளுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், தூரத் திலிருக்கும் யாவருக்கும் உள்ளது. நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங் கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை ” என்றான். நீ கிறிஸ்துவினுடையவனாய் இராதவரை, நீ ஒரு மெத்தோடிஸ்டாக, பாப்டிஸ்டாக, பெந்தேகொஸ்தேயனாக, நசரேயனாக,

கத்தோலிக்கனாகவோ இருக்கலாம். நீ கிறிஸ்துவினுடையவனாய் ஆகும் வரை இழக்கப் பட்டவனாயிருக்கிறாய். கிறிஸ்து உனக்குள்ளாக வருகிறார், அது பரிசுத்தாவியினால் உண்டாகும் புதிய பிறப்பாயிருக்கிறது. நாங்கள் ஜெபிக்கும் போது, இன்றிரவு அவரை பெற்றுக்கொள்ளுங்கள்.

96. உங்கள் தலைகளைத் தாழ்த்துங்கள். இந்த மகாபெரிய சம்பவம் நடக்குமென்று இங்குள்ளவர்களில் எத்தனை பேர் அறிந்துள்ளீர்கள் என எனக்கு வியப்பாயிருக்கிறது. ஒருக்கால் இன்றிரவு உங்கள் மனைவியோடு நீங்கள் படுக்கைக்குப் போகலாம், காலையில் பார்க்கும் போது அவள் போயிருப்பாள். தாயும் தகப்பனுமாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளை முத்தமிட்டு படுக்கைக்குப் போகலாம், காலையில் பார்க்கும் போது அந்த சிறிய படுக்கைகள் காலியாக இருக்கும். திருமதி. ஜோன்ஸ்க்கு என்ன நடந்தது என்பதை

அறிய நீங்கள் வீதியில் ஓடலாம், ஆனால், அவளும் கூட எடுத்துக் கொள்ளப்படுதலில் போயிருக்கலாம். எடுத்துக் கொள்ளப்படுதல் சமீபமாயுள்ளது. வேதம் மிகவும் தெளிவாய் கூறியுள்ளது.

97. இந்த கூட்டத்தில் உனக்கு தருணம் கிடைக்கும் போதே புத்தியுள்ள மனிதனைப் போன்று, புத்தியுள்ள மனுஷியைப் போன்று உங்களுடைய இருதயத்திற்குள் எழும் அந்த அழைப்பிற்கு கவனம் செலுத்தி, “கர்த்தராகிய தேவனே! அந்த நித்திய ஜீவனை என்னிலே நிரப்பும்” என்று நீங்கள் ஏன் சொல்லக் கூடாது? ஏனென்றால், உங்களுடைய ஆவி அறிவுப் பூர்வமான எண்ணங்கொள்ளுமானால், நீ இன்னும் பூமிக்குரியவனாயிருக்கிறாய். ஆனால்,பரலோகத்திலிருந்து வெளிவரும் தேவனுடைய ஆவியானது, உன் இருதயத்துக்குள் வந்து, உனக்குள்ளாக பரிசுத்த ஆவியை கொடுக்கின்றது.

உபத்திரம் வரும் போது, ஆவியானது, பரிசுத்த ஆவியானது திரும்பவுமாக அதனுடைய சிருஷ்டி கர்த்தாவிடம் போகிறது, நீயும் அதனோடு போகின்றாய். நீ எவ்வளவு தான் பக்தியுள்ளவனாயிருந்தாலும் சரி, உன்னை கொண்டு போகும் படியாய் உள்ளே ஏதோ ஒரு காரியம் இல்லாமல் அது போக முடியாது.

98. இந்த செய்தியின் வாயிலாக எத்தனைப் பேர் தலை வணங்கினவாறு, உங்கள் கரங்களை கிறிஸ்துவுக்கு உயர்த்தி, "தேவனே, உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பும். நீர் வருவீரானால், நான் உம்மோடு போக விரும்புகிறேன்" என்று கூறுவீர்கள்? உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. சபை முழுவதும் கரங்கள்! சொல்லப் போனால், இருநூறுக்கும் அதிகமான கரங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றது.

99. பாவியான நண்பனே! நீ கிறிஸ்துவை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாதவனானால், இந்த நேரத்தில் உன் கரத்தை உயர்த்தி, “கர்த்தராகிய இயேசுவே, என் மேல் இரக்கமாயிரும்” என்று கூறுவாயா? ஸ்திரீயே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிப் பாராக. அங்கே பின்னால் இருக்கிற உன்னை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. வேறு யாராவது, “என்னை நினைவு கூறும், கர்த்தாவே...” அங்கே இருக்கிற உம்மை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் உங்களோடிருப்பாராக. “என்னை நினைவு கூறும், கர்த்தாவே! என் கண்கள் இப்பொழுது தான் திறக்கப்பட்டது. அதிக காலமாக நான் என்னை ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொண்டிருந்தேன் என்பதை உணருகிறேன். ஆனால், மறுபடியும் பிறப்பது என்பதை ஒருபோதும் அறியாதவனாயிருந்தேன். நான் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளவில்லை”.

100. ஆகையால், ஒரு மனிதன் மறுபடியும் பிறந்தால் ஒழிய, தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் அல்லது ராஜ்ஜியத்தை காணவும் கூட மாட்டான்.

101. உங்கள் கரங்களை உயர்த்தி, “ஓ, பரிசுத்த ஆவியானவரே! என் மேல் இரக்கமாயிரும். நீர் சபைக்காக வரும் போது, என்னை எடுத்துக்கொள்வீரா?” என்று சொல்வீர்களா? ஸ்திரீயே! தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. “ஓ, தேவனே! என்னை நினைவு கூறும்” என்று சொல்லும் வேறுயாராவது.. இங்கே, இனிமையான... தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. அங்கே உள்ள ஸ்திரீ, தேவன் உம்மை ஆசீர் வதிப்பாராக. அங்கே, பின்னால் உள்ள ஸ்திரீயே உம்மையும். "ஓ, தேவனே, சுவற்றில் மீது எழுதப்பட்ட கையெழுத்தை நான் பார்க்கும் போது, என் மேல் இரக்கமாயிரும்! வேதத்தில் சொல்லப்

பட்டிருக்கிறதை இன்றிரவு நான் கண்டேன் என்று சொல்லக்கூடிய அறிவாற்றல் எனக்கு உண்டு. அதாவது, இது சரித்திரம் மீண்டும் நடைபெறுதலே".

102. நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம். உதவி செய்யத்தக்கதாக அங்கே ஒன்றுமில்லை. உலகத்தை அழிக் கக்கூடிய காரியமானது, பாவமான மனித னின் கரத்தில் இருக்கிறது.

103. இன்னும் கொஞ்சம் தான் உண்டு. கிறிஸ்துவினிடத்தில் வருவதற்காக நியமிக் கப்பட்டவர்களில் நீ ஒருக்கால் கடைசி ஆளாக இருக்கலாம். கடைசியான நபர் வந்ததும், நியாயத்தீர்ப்பு தாக்குகிறது. இன்னமும் ஒரு காரியம் குறைவாயிருக் கிறது, அது ஒருக்கால் நீயாக இருக்கலாம். நாங்கள் காத்திருக்கும் இவ்வேளையிலே இன்றிரவு நீங்கள் அவரை ஏற்றுக்கொள் வீர்களா?

104. இருபது, முப்பது கரங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. இங்கு ஜனங்களை முன்னால் கொண்டு வந்து நிறுத்தும்படியாக ஒரு பீட அழைப்பை கொடுக்க நமக்கு இடமில்லை. ஏனென்றால், நமக்கு இடம் ஏதும் இல்லை. ஆனால், நான் உங்களை கேட்கப் போகிறேன், நிச்சயமாக, உத்தமமாயிருந்து எச்சரிப்பின் சத்ததிற்குசெவி கொடுங்கள். உத்தமமாயிருந்து, நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கும் இடத்தில் இருந்தே, “கர்த்தாவே, பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும். நான் கிருபையின் திரைக்கு பின்னால் அதை கடந்து போவதற்கு முன்னர் என்னை ஏற்றுக்கொள்ளும். நான் பாவம் செய்து, என் கிருபையின் நாளை விட்டு தூரமாகும் முன்பு, கர்த்தாவே என் மேல் இரக்கமாயிரும்!" என்று கேளுங்கள். அவர் அதை செய்வார்.

105. ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தாவே! இன்றிரவு நாங்கள் ஒரு பயங்கரமான நிலையில் நின்று கொண்டிருக்கிறோம். நாங்கள் உம்முடைய வார்த்தையை வாசிக்கும் போது, எந்த நேரத்திலும் வானொலி செய்தி திடீரென்று அறிவிக் கப்படலாம், ராக்&ரோல் இசைக்குழு "உம்மண்டை தேவனே" என்ற பாட்டை பாடிக் கொண்டிருக்கலாம். அப்பொழுது மிகவும் காலம் கடந்ததாயிருந்து, நியாயத் தீர்ப்பானது விழுந்து விட்டதாய் இருக்க லாம். ஏவுகணைகள் நம்மை நோக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மைல்கள் கணக்கில், மிகவும் அதிக அளவில், பூமியையே துடைக்கும் அளவுக்கு அணு சக்தியின் அழிவுகள், அது போன்ற காரியம் முழு உலகத்தை தீக்குள்ளாக்கும். அது பாவமான மனிதனின் கரத்தில் இருக்கிறது. அந்த விதமாகத் தான் அது சம்பவிக்கும் என்று வேதம் சொல்லுகிறது.

நாம் சுவற்றின் மீது எழுதப்பட்ட கையெழுத்தை காண்கிறோம்.

106. ஓ, தேவனாகிய கர்த்தாவே, இப்படிப்பட்டதான ஒரு செய்தியை இந்த ஜனங்களுக்கு கொண்டு வர நான் போதுமானவனாக இல்லை. இங்கே நின்று கொண்டு, இப்படிப்பட்டதான ஒரு பொருளைக் குறித்து பேச நான் எவ்வளவு சிறியவனாய் இருப்பதாக உணருகிறேன்! ஆனால் அதை சரிவர செய்ய முடியாத என் பங்கிற்காக என்னை மன்னிப்பீரா? ஆனால், எப்படியாயினும் நீர் விரும்புகிற வண்ணமாக இந்த செய்தியை அவர்க ளுடைய இருதயத்தின் ஆழத்திற்குள் புகுத்த வேண்டுமென்று என் இதய பூர்வ மாக கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வேளையானது நெருங்கி கொண்டிருக் கிறதை நான் காண்கிறேன். இரக்கமா யிரும்! தேவனே, ஒவ்வொருவரையும் இரட்சியும், அவர்களை பரிசுத்த ஆவியி

னால் நிரப்பும். அவர்கள் உம்முடைய பிள்ளைகளாய், உம்முடைய நன்மையி னால் தெய்வீகமாய் சுற்றப்பட்டு, கர்த்தரா கிய இயேசுவின் பாதுகாப்பைப் பெறுவார் களாக.

107. ஏனென்றால், நம்முடைய தேசம் பாதுகாப்பு அற்றதாய் இருக்கிறது. நாம் என்ன நினைத்தோம், அதே விதமாகத் தான் பாபிலோனிய ராஜ்யம் செய்தது, எல்லா நேரத்திலும் அதையே செய்தது. ஆனால், கிரியை செய்யத்தக்க ஒரு பொல்லாத தேசம் இருந்தது. நம்மை விட முன்னிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று இப்பொழுது நமக்கு தெரிய வரும் வரை, ஒரு பொல்லாத தேசமானது கிரியை செய்து கொண்டிருந்தது. நாமோ, அவர்க ளுடைய இரக்கத்தில் இருக்கிறோம்.

108. கர்த்தாவே, சபையானது உம்மு டைய இரக்கத்திற்காய் காத்துக்கொண்டிருக்

கிறது. அவர்கள் அழித்துவிடுவார்கள்; ஆனால், நீரோ உம்முடைய சபையை எடுத்துக்கொள்வீர். ஓ, கர்த்தாவே! இன்றிரவு உம்முடைய பாதுகாப்பிற்குள் எங்களை எடுத்துக்கொள்ளும். இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாய் எங்களை ஆசீர்வதியும், இயேசுவின் நாமத்தில் நாங்கள் ஜெபிக்கிறோம், ஆமென்.

109. ஒரு நிமிடம், மென்மையாக, பயபக்தியாக இருங்கள். (பிரன்ஹாம் "Softly and tenderly Jesus is calling" என்ற பாடலை பாடுகிறார்.)

மெதுவாகவும் மென்மையாகவும் இயேசு அழைக்கிறார்.

உனக்கான எனக்கான ஒரு அழைப்பு இப்பொழுது நாம் பாடுகையில், அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்

வாசலில் அவர் காத்துக்கொண்டிருக்கிறார் உனக்கான எனக்கான ஒரு கவனிப்புவீட்டுக்கு வாருங்கள், எங்கே? மேலே, மேலே உயர வாருங்கள்

சோர்வுற்றவர்கள் வீட்டுக்கு வாருங்கள் ஆர்வத்தோடும் மென்மையோடும் இயேசு அழைக்கிறார் அழைக்கிறார் ஓ, பாவியே வீட்டுக்கு வா

110. ஓ, இப்பொழுது அது சம்பவித்தால் அது என்னே ஒரு அற்புதமான நேரமாய் இருக்கும். ஓ, அது எல்லாம் சரி, எந்த நேரத்திலும் அவர் ஆயத்தமாயிருக்கிறார். ஆமென்! அவரை நான் அறிய மிகவும் ஆவலாயிருக்கிறேன். இங்கே நலிந்து போனதும், தளர்ந்ததுமான இந்த சரீரம் ஒரு நொடிப் பொழுதில் கண்ணிமைக்கும் நேரத்தில் மாறி போகும் என்பதால் நான் மகிழ்ச்சியாயிருக்கிறேன்.

நான் என்றென்றைக்குமாய் ஜீவிக்கும் படியாக, மீண்டுமாக ஒரு வாலிபனாவேன்.

அங்கே முதியோர் என்றென்றைக்கு மாய் இளமையாயிருப்பார்கள். ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டவர் களாய் அழியாமை உள்ளவர்களாய் அவருடைய சாயலில் இருப்போம். நட்சத் திரங்கள் மற்றும் சூரியனை காட்டிலும் அதிகமாய் பிரகாசிப்பார்கள். என்னே ஒரு தருணம்! அவரை தள்ளி போடாதீர்கள். அந்த நித்தியமான நாளில் "ஓ, நன்றாய் செய்தாய் " என்று அவர் சொல்வதைக் கேட்க நீ எவ்வளவாய் வாஞ்சிக்கிறாய்! அருமையான இரட்சகரை உன் இருதயத் திலிருந்து புறம்பே தள்ளாதே, அவரை தள்ளி போடாதே. (அது இரவாய் இருக் கட்டும்).

# ஆசீர்வாதங்களும் சாபங்களும்



# உபாகமம் 28:1-68

1. இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும் படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனா கிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளி லும் உன்னை மேன்மையாக வைப்பார்.

2. நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது, இப் பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்க ளெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்.

3. நீ பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட் டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட் டிருப்பாய்.

4. உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

5. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

6. நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

7. உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்குமுன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார்; ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.

8. கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன்

தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.

9. நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்.

10. அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்.

11. உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனி யிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளை யிடுவார்.

12. ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும்

வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப் பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய்.

13. இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வார்த்தைகள் யாவையும் விட்டு விலகி வேறே தேவர்களைச் சேவிக்கும்படி, நீ வலதுபுறம் இடதுபுறம் சாயாமல்,

14. இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை கைக்கொள்ளவும் அவைகளின்படி நடக்க வும் அவைகளுக்குச் செவிகொடுத்து வந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலா வாய்.

15. இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படி யும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர்

சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயா கில், இப்பொழுது சொல்லப்படும் சாபங் களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்.

16. நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப் பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய்.

17. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும்.

18. உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக் கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும்.

19. நீ வருகையிலும் சபிக்கப்பட்டிருப் பாய், நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப் பாய்.

20. என்னைவிட்டு விலகி நீ செய்து வருகிற உன் துர்க்கிரியைகளினிமித்தம் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அழியுமட்டும், நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும்

கர்த்தர் உனக்குச் சாபத்தையும் சஞ்சலத்தையும் கேட்டையும் வரப்பண்ணுவார்.

21. நீ சுதந்தரிக்கும் தேசத்தில் கர்த்தர் உன்னை நிர்மூலமாக்குமட்டும் கொள்ளை நோய் உன்னைப் பிடித்துக்கொள்ளப் பண்ணுவார்.

22. கர்த்தர் உன்னை ஈளையினாலும், காய்ச்சலினாலும் உஷ்ணத்தினாலும், எரிபந்தத்தினாலும், வறட்சியினாலும், கருக்காயினாலும், விஷப்பனியினாலும் வாதிப்பார்; நீ அழியுமட்டும் இவைகள் உன்னைப் பின்தொடரும்.

23. உன் தலைக்குமேலுள்ள வானம் வெண்கலமும், உனக்குக் கீழுள்ள பூமி இரும்புமாய் இருக்கும்.

24. உன் தேசத்து மழையைக் கர்த்தர் புழுதியும் மண்ணுமாக பெய்யப்பண்ணுவார்; நீ அழியுமட்டும் அப்படியே வானத்திலிருந்து உன்மேல் இறங்கிவரும்.

25. உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறிய அடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார்; ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய், ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போவாய்; நீ பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோவாய்.

26. உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை விரட்டுவாரில்லாதிருப்பார்கள்.

27. நீ குணமாகாதபடி கர்த்தர் உன்னை எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும், மூலவியாதியினாலும், சொறியினாலும், சிரங்கினாலும் வாதிப்பார்.

28. கர்த்தர் உன்னைப் புத்திமயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும், மனத்திகைப்பினாலும் வாதிப்பார்.

29. குருடன் அந்தகாரத்திலே தடவித் திரிகிறதுபோல, நீ பட்டப்பகலிலே தடவிக்

கொண்டு திரிவாய்; உன் வழிகளில் ஒன்றும் உனக்கு வாய்க்காதேபோம்; உதவி செய்வாரில்லாமல் நீ எந்நாளும் ஒடுக்கப் படுகிறவனும் பறிகொடுக்கிறவனுமாய் இருப்பாய்.

30. பெண்ணை உனக்கு நியமிப்பாய், வேறொருவன் அவளுடன் சயனிப்பான்; வீட்டைக் கட்டுவாய், அதிலே குடியிருக்க மாட்டாய்; திராட்சத்தோட்டத்தை நாட்டு வாய், அதின் பலனை அனுபவிக்க மாட்டாய்.

31. உன் மாடுகள் உன் கண்களுக்கு முன்பாக அடிக்கப்படும், நீ அதில் ஒன்றும் புசிப்பதில்லை; உன் கழுதை உனக்கு முன்பாகக் கொள்ளையிட்டுக் கொண்டு போகப்பட்டு, உனக்குத் திரும்ப அகப்படா மற்போம்; உன் ஆடுகள் உன் சத்துருக்க ளுக்குக் கொடுக்கப்படும்; விடுவிப்பார் ஒருவரும் உனக்கு இல்லாதிருப்பார்கள்.

32. உன் குமாரரும் உன் குமாரத்திகளும் அந்நிய ஜனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்; அவர்களைக் காண உன் கண்கள் நாடோறும் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போம்; உன் கையில் பெலனில்லாதிருக்கும்.

33. உன் நிலத்தின் கனியையும், உன் பிரயாசத்தின் எல்லாப் பலனையும் நீ அறியாத ஜனங்கள் புசிப்பார்கள்; நீ சகலநாளும் ஒடுக்கப்பட்டும் நொறுக்கப்பட்டும் இருப்பாய்.

34. உன் கண்கள் காணும் காரியங்களினாலே மதிமயங்கிப்போவாய்.

35. உன் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் குணமாகாதபடிக்கு, கர்த்தர் உன்னை முழங்கால்களிலும் தொடைகளிலும் கொடிய எரிபந்தப் பருக்களினாலே வாதிப்பார்.

36. கர்த்தர் உன்னையும், உனக்காக நீ ஏற்படுத்திக்கொண்ட ராஜாவையும், நீயும்

உன் பிதாக்களும் அறியாத ஜாதிகளிடத்துக்குப் போகப்பண்ணுவார்; அங்கே நீ மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.

37. கர்த்தர் உன்னைக் கொண்டுபோய் விடும் எல்லா ஜனங்களுக்குள்ளும் பிரமிப்பும் பழமொழியும் பரியாசச் சொல்லுமாவாய்.

38. மிகுந்த விதையை வயலுக்குக் கொண்டுபோவாய், கொஞ்சம் அறுப்பாய்; வெட்டுக்கிளி அதைப் பட்சித்துப்போடும்.

39. திராட்சத்தோட்டங்களை நாட்டிப் பயிரிடுவாய், ஆனாலும் நீ திராட்சரசம் குடிப்பதும் இல்லை, திராட்சப்பழங்களைச் சேர்ப்பதும் இல்லை; பூச்சி அதைத் தின்றுபோடும்.

40. ஒலிவமரங்கள் உன் எல்லைகளிலெங்கும் இருக்கும், ஆனாலும் அதின் எண்ணெயை நீ பூசிக்கொள்வதில்லை; உன் ஒலிவமரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்துபோம்.

41. நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோ டேகூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப் போவார்கள்.

42. உன் மரங்களெல்லாவற்றையும் உன் நிலத்தின் கனிகளையும் விட்டில் பட்சித்துப்போடும்.

43. உன் நடுவிலிருக்கிற அந்நியன் உனக்கு மேற்பட்டு மேன்மேலும் உயர்ந் திருப்பான்; நீ மிகவும் தாழ்த்தப்பட்டுப் போவாய்.

44. அவன் உன்னிடத்தில் கடன்படான்; நீ அவனிடத்தில் கடன்படுவாய்; அவன் தலையாயிருப்பான், நீ வாலாயிருப்பாய்.

45. உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு விதிக்கத்தக்க அவருடைய கற்பனைகளை யும் கட்டளைகளையும் கைக்கொள்ளும் படி, நீ அவர் சத்தத்திற்குச் செவிகொடாத படியினால், இந்தச் சாபங்கள் எல்லாம்

உன்மேல் வந்து, நீ அழியுமட்டும் உன்னைத்தொடர்ந்து பிடித்து,

46. உன்னிலும் உன் சந்ததியிலும் என்றைக்கும் அடையாளமாகவும் அற்புத மாகவும் இருக்கும்.

47. சகலமும் பரிபூரணமாயிருக்கை யில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போ டும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியா மற்போனதினிமித்தம்,

48. சகலமும் குறைவுபட்டு, பட்டினி யோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்; அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இருப்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடு வார்கள்.

49. கிழவன் என்று முகம்பாராமலும், வாலிபன் என்று இரங்காமலும் இருக்கும் கொடிய முகமுள்ளதும்,

50. உனக்குத் தெரியாத பாஷையைப் பேசுகிறதுமான ஜாதியை வெகுதூரத்தி லுள்ள பூமியின் கடையாந்தரத்திலிருந்து கர்த்தர் உன்மேல் கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார்.

51. நீ அழியுமட்டும் அந்த ஜாதியான் உன் மிருகஜீவன்களின் பலனையும், உன் நிலத்தின் கனியையும் புசிப்பான்; அவன் உன்னை அழித்துத் தீருமட்டும் உன் தானியத்திலும், திராட்சரசத்திலும், எண்ணெயிலும், உன் மந்தைகளிலுள்ள ஆடுமாடுகளிலும் உனக்கு ஒன்றும் மீதியாகவைக்கமாட்டான்.

52. உன் தேசமெங்கும் நீ நம்பி யிருக்கும் உயரமும் அரணிப்பும் மதில்கள் விழுமளவும், அவன் உன் வாசல்களி லெங்கும் உன்னை முற்றிக்கைப்போடு வான்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன்னுடைய தேசமெங்குமுள்ள

உன்னுடைய வாசல்கள்தோறும் உன்னை முற்றிக்கைப்போடுவான்.

53. உன் சத்துருக்கள் உன்னை முற்றிக்கைப்போட்டு நெருக்குங்காலத்தில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் புத்திரபுத்திரிகளின் மாம்சத்தைத் தின்பாய்.

54. உன் சத்துருக்கள் உன் வாசல்களி லும் உன்னை முற்றிக்கைப்போட்டு நெருக் குங்காலத்தில், உன்னிடத்தில் செருக்கும் சுகசெல்வமுமுள்ள மனிதன் சகலத்தையும் இழந்து, தன் இல்லாமையிலே தான் தின்னும் தன் பிள்ளைகளின் மாம்சத்திலே,

55. தன் சகோதரனுக்காகிலும், தன் மார்பில் இருக்கிற மனைவிக்காகிலும், தனக்கு மீந்திருக்கிற தன் மக்களில் ஒருவ னுக்காகிலும் கொஞ்சமேனும் கொடாதபடி அவர்கள்மேல் வன்கண்ணாயிருப்பான்.

56. உன்னிடத்தில் சுகசெல்வத்தினா லும் செருக்கினாலும் தன் உள்ளங்காலைத்

தரையின்மேல் வைக்க அஞ்சின செருக்கும் சுகசெல்வமுமுள்ள ஸ்திரீ தன் கால்களின் நடுவே புறப்பட்ட தன் நஞ்சுக்கொடியி னிமித்தமும், தான் பெற்ற பிள்ளைகளி னிமித்தமும், தன் மார்பில் இருக்கிற புருஷன்மேலும் தன் குமாரன்மேலும் தன் குமாரத்தியின்மேலும் வன்கண்ணாயிருப்பாள்;

57. உன் சத்துருக்கள் உன் வாசல்களில் உன்னை முற்றிக்கைப்போட்டு நெருக்குங் காலத்தில், சகலமும் குறைவுபடுவதினால், அவைகளை இரகசியமாய்த் தின்னுவான்.

58. உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால்,

59. கர்த்தர் நீங்காத பெரிய வாதைக ளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும்

உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து,

60. நீ கண்டு பயந்த எகிப்து வியாதிகளெல்லாம் உன்மேல் வருவிப்பார்; அவைகள் உன்னைப் பற்றிக்கொள்ளும்.

61. இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியையும் வாதையையும் நீ அழியுமளவும் கர்த்தர் உன்மேல் வரப்பண்ணுவார்.

62. திரட்சியிலே வானத்து நட்சத்திரங்களைப்போல் இருந்த நீங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடாமற்போனதினால், கொஞ்சம் ஜனமாய்ப்போவீர்கள்.

63. கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்யுமளவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள் மேல் இரம்மியமாயிருந்தாரோ, அப்படியே கர்த்தர் உங்களை அழிக்கவும் உங்களை அதம்பண்ணவும் இரம்மியமாயிருப்பார்; நீங்கள் சுதந்தரிக்

கப்போகிற தேசத்திலிருந்து பிடுங்கிப் போடப்படுவீர்கள்.

64. கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனைதுவக்கி பூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதற அடிப்பார்; அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்.

65. அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது; உன் உள்ளங் கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண் களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப் பார்.

66. உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும்; உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில்கொண்டிருப்பாய்.

67. நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லு வாய்.

68. இனிக் காணாதிருப்பாய் என்று நான் உனக்குச் சொன்னவழியாய், கர்த்தர் உன்னைக் கப்பல்களிலே எகிப்திற்குத் திரும்பக் கொண்டுபோகப்பண்ணுவார்; அங்கே உங்கள் சத்துருக்களுக்கு வேலைக் காரராகவும் வேலைக்காரிகளாகவும் விற்கப்படுவீர்கள்; உங்களைக் கொள் வாரும் இல்லாதிருப்பார்கள் என்றான்.

சகோ.பிரன்ஹாம்:

**தேவன் பாவத்தை வெறுக்கிறார், பாவம் நியாந்தீர்க்கப்பட்டாக வேண்டும். தேவன் அமெரிக்காவை அதன் பாவத்திற்காக மிக சீக்கிரமாக நியாயந்தீர்க்கவில்லையென்றால், அவர் சோதோம் கோமோராவை உயிரோடெழுப்பி, அவைகளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. நிச்சயமாக. நாம் விதைத்ததை நாமே அறுப்போம், ஆவிக்குரிய விதமாக எதையாவது பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் அது சத்தியமென்று தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். நாம் பாதையின் முடிவில் இருக்கிறோம்.**

செய்தி: *தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்*

~~~~~~~~~~~

**God hates sin, and sin must be judged. It's been said, that if God doesn't judge America pretty soon for its sin, He will have to resurrect Sodom and Gomorrah and apologize to them. Certainly. And we will reap what we sow, and everybody that's got any spirituality to them is realizing that's the truth. We're at the end of the road.**

ESCAPE.HITHER.COME.QUICKLY_ WATERLOO.IA SUNDAY_ 58-0202
~~~~~~~~~~~

Bro. Branham:

72. மாற்றப்படாத ஒரு இருதயத்திற்கு பாவமானது மகிழ்ச்சி அளிக்கின்ற ஒன்றாய் இருக்கும். மாற்றப்படாத மனதிற்கு அது அருமையானதாக இருக்கும். ஆனால் அது மரணத்திற்குரிய வழியாகும். மரணத்தைத் தவிர வேறொன்றும் மீதம் இருக்காது. "பாவத்தின் சம்பளம் மரணம்". ஆகவே சம்பளமாகிய அறுவடையை நீ செய்தாக வேண்டும். நீ காற்றுக்கு (winds) விதைத்தாய், இப்பொழுது சூறாவளி காற்றை (whirl wind) அறுக்கிறாய்.

செய்தி: ஆவிக்குரிய நினைவிழப்பு, பத்தி எண் 72



# பாவம் எந்த ஒரு தேசத்திற்கும் ஒரு நிந்தையாய் இருக்கிறது

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து